இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb. 1876

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021- 222-2378 Fax: 021-222-9041, ISSN 1391-7633

மலர்: 136 | இதழ்: 19 | பக்கங்கள்: 08 | திகதி 21-10-2012 | விலை: 15.00

## "எரியும் திரிகளாக விளங்கி திருக்குடும்ப சகோதரிகள் எம் மறை மாவட்டங்களை வளர்த்தார்கள்"

- இறுவெட்டு இணையத்தள ஆரம்ப விழாவில் குருமுதல்வர் அருள்முனைவர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள்

இலங்கை மண்ணில் திருக்குடும்ப சபையின் வருகையின் 150வது நிறைவை முன்னிட்ட யாழ் மாகாண சபையினர் இரு வேறு இறுவட்டுக்களை வெளியிட்டு வைத்து தமக்கென ஓர் புதிய இணையத் தளத்தையும் ஆரம்பித்து வைத்தனர். இவ்விழா கடந்த 17ம் திகதி யாழ் கலைத்தூது மண்டபத்தில் நடை பெற்ற போது இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருள்முனைவர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் அடிப்படை வசதிகள் குறைந்த காலகலட்டத்தில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து



அருட்சகோதரிகள் எம்மண்ணிற்கு வந்து இறை நம்பிக்கையை எம்மவர்களுக்கு வழங்கினர். அவர்கள் தம்மை வருத்தி உருக்கி பிறருக்கு வாழ்வு கொடுத்தனர். சிறப்பாக இன்றைய எம் மண்ணின் கல்விப் பணிக்கு வித்திட்டவர்கள் எம் மறைமாவட்டங்களையும் தமது சபையையும் தமது தன்னலமற்ற பணிகளினால் வளர்த்தவர்கள் அவர்களை நினைத்து நன்றி கூறுவது எமது அவசிய கடமை என்றார்.

இந்நிகழ்வில் தலைமையுரையை மாகாண தலைவி அருட்சகோதரி. யோலண்ட் மத்தாயஸ் வழங்கி இன்று சபைச்கோதரிகளின் பணி வாழ்விற்கு நன்றியாக இவ் இறுவட்டு அமைகின்றது எனக் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அருட்பணி. றூபன் மரியாம்பிள்ளை அடிகள் வளர்ந்து வரும் ஊடக உலகில் திருச்சபையையும் இணைத்து பலன் கொடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## அருளாளர் யோசவ்வாஸ் கட்டிடத்திறப்பு விழா

பண்டத்தரிப்பு தியான இல்ல வளாகத்துக்குள்ளே புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 'அருளாளர் யோசவ்வாஸ் கட்டிடமானது, 08.10.2012 அன்று யாழ். மறைமாவட்ட **ஆயர் அதி.வண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை** அவர்களின் ஆசீர்வாதங்களுடன் திறந்து வைக்கப் பட்டது. தங்குவதற்கான அறைகளையும் பரந்த மேடையுடன் கூடிய பெரிய மண்டபத்தையும் கொண்டதான இவ்வழகிய கட்டிடம், யாழ். மறைமாவட்ட நிதிப்பொறுப்பாளர் அருட்பணி. J.B.அன்ரனிதாஸ் அடிகளாரின் நேரடி முகாமைத்து வத்தின் கீழ் உருவாக்கப்பட்டது.



அன்றையநாள் நிகழ்வுகள் யாவும் யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது. கற்களுக்குள்ளும், மண்களுக்குள்ளும் கலந்து கிடக்கும், எம் கண்களுக்குத் தெரியாத பலரது இரத்தங்களிலும், வியர்வைத்துளிகளிலும் கம்பீரமாக எழுந்து நிற்கிறது இக்கட்டிடம். அன்றைய நாளிலே, ஆசிமழை பொழிந்து இந்த முயற்சியில் வெற்றி அளித்த வல்ல தேவன் புகழ் பாடி, நற்கருணை ஆராதனை இடம்பெற்றது. அருட்பணி பிறாயன் அடிகளாரும், அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரும் இணைந்து நற்கருணை வழிபாட்டை சிறப்பித்தார்கள். பின்னர் உரைநிகழ்த்திய யாழ்.ஆயர் அருட்பணி அன்ரனிதாஸின் கடின உழைப்பைப் பாராட்டியதோடு எதிர்காலத்தில் அருட்பணியாளர்கள் மட்டுமன்றி துறவிகளும், பொதுநிலையினரும் பயன்படுத்தும் வகையில் இதை பராமரிக்கப் பணித்தார். தொடர்ந்து தொழிலாளர்கள் யாவரும் ஆயர் அவர்களால் கௌரவிக்கப்பட்டனர். அருட்பணி அன்ரனிதாஸ் அவர்கள் நன்றியுரை வழங்கினார். திருமறைக்கலாமன்றத்தினர் வழங்கிய 'வரவேற்பு நடனம், 'ஆராரோ ஆரிரரோ நடனம், 'அனைத்தும் அவரே' நாட்டுக்கூத்து ஆகியன மிகவும் திறம்பட நடைபெற்று நிகழ்வுகள் யாவும் சுவையான மதிய போசனத்துடன் நிறைவு பெற்றன.

இதில் யாழ். மறைமாவட்ட குருக்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், பணியாளர்கள், பொதுநிலையினர் எனப் பலரும் கலந்து மகிழ்ந்தனர். கண்கவரும் அந்தக் கலைக் கட்டிடத்தினுள் காலாற அமர்ந்து பரவசம் அடைந்தது ஒரு அழகிய அனுபவம்.

*அருட்சகோதரன் சி.அஜந்தன்*

## தேசிய செபமாலைப் பேரணி

யாழ் மறைமாவட்ட மரியாயின் சேனையினர் வழிநடத்தலில் மாபெரும் தேசிய மட்டத்திலான செபமாலை பேரணி ஒன்று எதிர்வரும் 28ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3.00மணிக்கு யாழில் நடைபெறவுள்ளது. இச்செபமாலைப்பவனியில் இலங்கையில் அனைத்துப் பாகங்களிலிருந்தும் கத்தோலிக்க மக்கள் பங்குபற்றவுள்ளனர். இப்பவனியானது இலங்கையில் முதல் முதலாக மரியாயின் சேனை ஆரம்பிக்கப்பட்ட பங்காகிய பாண்டியன்தாழ்வு தூய அன்னாள் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகி ஆஸ்பத்திரி வீதி - பிரதான வீதி - பாங்சால் வீதி வழியாக யாழ் மரியன்னை பேராலயத்தை வந்தடையும்.

பவனியின் இறுதியில் யாழ் ஆயரின் தலைமையில் யாத்திரை நிறைவு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இச்செபமாலைப் பேரணியில் தென்பகுதி, கிழக்குப்பகுதி மக்கள் அடங்கலாக மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களை எதிர்பார்ப்பதாக இப்பேரணியின் ஏற்பாட்டாளரும், மரியாயின் சேனையின் யாழ் மறைமாவட்ட இயக்குநருமாகிய அருட்பணி. றெஜி இராயேஸ்வரன் அடிகளார் பாதுகாவலனுக்கு தெரிவித்தார்.

## தேசிய நாடகப் போட்டியில் சென். பற்றிக்ஸ் முதல் நிலை

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்ச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கிடையில் தேசிய மட்டத்தில் நடத்திய நாடகப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி முதன்மை நிலையில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளது. பட்டம் என்னும் சமூக நாடகமே முதலிடம் பெற்றது.

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## திருக்குடும்ப முப்பொன்விழாவில் பொதுநிலையினர் வாழ்த்து அறிக்கை

திருக்குடும்ப முப்பொன்விழாவில் யாழ் மறைமாவட்ட பொது நிலையினர் வாழ்த்து அறிக்கையினை வெளியிட்டுள்ளனர் அவ் அறிக்கையில் திருக்குடும்ப சபை வழியாக இறைவன் கடந்த 150 ஆண்டுகளாக எமக்கு வழங்கிய அருள் வரங்களை நன்றியோடு நினைவு கூர்ந்து பின் வரும் விடயங்களை செய்ய அழைக்கிறோம்.

ஒக்டோபர் 27ம் திகதி காலை 10.30 மணிக்கு யாழ் பேராலயத்தில் இவர்கள் ஒப்புக்கொடுக்கும் நன்றித் திருப்பலியில் பங்குகள் அனைத்திலுமிருந்து இயலுமான அனைவரும் கலந்த கொண்டு செபிப்போம்.

அன்றைய நாளிலோ அல்லது 28 ஞாயிறு தினத்தன்றோ இக் கருத்தை முன்னிறுத்தி. பங்குகள் தோறும் திருப்பலி ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

எமது பங்கில் அல்லது எமக்கு அருகிலுள்ள திருக்குடும்ப மடங்களுக்குச் சென்று நன்றியும் வாழ்த்தும் தெரிவிப்போம்.

மேலும் யாழ் மறைமாவட்ட பொதுநிலையினர் கழகத்தினராகிய நாம் இவ்வறிக்கை மூலம் எமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த பொது நிலையினர் சார்பில் திருக்குடும்ப சகோதரிகள் சபையின் யாழ் மாகாணத் தலைவி அவர்களுக்கும் அனைத்து அருட்சகோதரிகளுக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். என குறிப்பிடப்பட்டுள்ளது.

## "அசிபா" ஆறாவது பொது அமர்வு இம்முறை இலங்கையில்

அசிபாவின் 6வது பொது அமர்வு இம்முறை இலங்கையில் சிலாபம் மறைமாவட்டத்தில் நடை பெறுகின்றது. இப்பொது மாநாடு ஐப்பசி 18ம் திகதி முதல் 24ம் திகதி வரை நடைபெற்றுவருகின்றது.

மூன்று ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் இம்மாநாடு கடந்த காலங்களில் தாய்லாந்து, தென் கொரியா, இந்தியா, பிலிப்பின்ஸ், போன்ற நாடுகளில் நடைபெற்றன. இம்முறை 17 நாடுகளில் இருந்து 11 ஆயர்கள் அடங்கலாக நூற்றுக்கு மேற்பட்ட திருநிலையினரும் பொது நிலையினரும் பங்கேற்றுள்ளனர். இப்பொது அமர்வை திருத்தந்தையின் இலங்கைக்கான தூதுவர் மேதகு ஜோசப் ஸ்பிற்றரி திருப்பலியுடன் ஆரம்பித்துவைத்தார். இம் மாநாட்டில் எமது மறைமாவட்டத்தில் இருந்து அருட்பணியாளர்கள், இயேசுரட்ணம், இரவிச்சந்திரன், அகஸ்ரின் அடிகளார்களும் திருவாளர்கள் ஏ. சத்தியாம்பிள்ளை, பிரான்சிஸ் பெர்னான்டோ அவர்களும் பங்கேற்றுள்ளனர். இம்மாநாட்டினை ஆசிய ஆயர்கள் பேரவையும் இலங்கை ஆயர்கள் பேரவையும் இணைந்து ஒழுங்கு செய்துள்ளது.

## எமது எண்ணம்

ஆண்டவர் நகரைக் காக்காவிட்டால் காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும்.

# நம்பிக்கையின் ஆண்டு?

உலகளாவிய திருச்சபையின் விசுவாசம் புதுப்பிக்கப்படவும் புத்துயிர் பெறவும் வேண்டி திருத்தந்தை 11.10.2012 - 24.11.2013 வரை அனைத்துலக அரசராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெருவிழா வரையான காலப்பகுதியை விசுவாச ஆண்டாக பிரகடனப்படுத்தியுள்ளார்.

திருச்சபையின் கருவூலங்களில் இருந்து தூய நற்கருணை பற்றியும் இறைவார்த்தை பற்றியும் நன்கு தியானித்து சிறப்பித்த எமக்கு அவற்றை மேலும் திடப்படுத்த இவ்விசுவாச ஆண்டு உதவும் என்பதில் சந்தேகமில்லை. "நம்பிக்கையின், சாட்சியத்தின், பகிர்தலின் விசுவாச அனுபவத்தை நோக்கி" கிறிஸ்தவர்களாகிய நாம் உருளும் உலகில் பயணிக்க வேண்டியுள்ளது.

கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவுப்பாலம் அல்லது உறவின் ஆழம் விசுவாசத்தின் மூலமே கட்டியெழுப்ப முடியும். இயேசுவின் சீடர்களில் ஒருவரான தோமையார் இயேசு உயிர்த்தெழுந்ததை நம்பவில்லை. இயேசுவின் ஆணிகள் கடாவப்பட்ட கரங்களில் தனது விரலை இட்டுப்பார்த்தாலே ஒழிய நான் நம்பப்போவதில்லையென அவர் ஆணித்தரமாக கூறுகின்றார். இயேசுகிறிஸ்து அவர் முன் தோன்றிய போது தோமையார் விசுவாசம் கொண்டார். "என்னைக் கண்டதால் நீ விசுவசித்தாய், காணாமல் விசுவசிப்போர் பேறுபெற்றோர்" என ஆண்டவர் திருவாய் மலர்ந்தமை தோமையாருக்கு மட்டுமல்ல எமக்கும் தான். நாமும் புதுமைகளைக்கண்டால், வேண்டுதல் கிடைக்கப் பெற்றால் மட்டுமே கடவுளை நம்புகின்றோம். இல்லையேல் "கடவுள் இருக்கின்றாரா?" மனிதன் கேட்கிறான்.

பெரும்பாடுள்ள பெண் இயேசுவின் ஆடையின் நுனியை தொட்டால் தான் குணமடைவேன் என நம்பி அவர் மேலாடையைத் தொட்டு குணமடைந்தாள். அவள் விசுவாசம் அவளை இரட்சித்தது. கடுகளவு விசுவாசம் இருந்தால் மலையைப் பார்த்து பெயர்ந்து போ என்று சொல்ல அம்மலை பெயர்ந்து போகும் என கிறிஸ்து கூறியது எமக்கு நன்கு தெரியும். ஆனால் இத்தகைய விசுவாச வாழ்வை இன்று நாம் வாழ்கின்றோமா? அவிசுவாசிகளாக வாழ்ந்து விளக்கில் விழுந்த விட்டில்களாக அவலங்களையும், துன்பங்களையும், சோதனைகளையும், வேதனைகளையும் நாம் இன்று சந்தித்து கேள்விக்குறியோடு கேள்விக்குறியாகி நிற்பதற்கு காரணம் ஆண்டவனில் நாம் விசுவாசம் கொள்ளாமல் உலகத்தை விசுவசிப்பதே ஆகும். கடவுளை மறந்து கடவுளை மறுத்து ஆமணக்கம் செடியின் கீழ் அமர்ந்த எலியா போலவும் நினிவேக்கு கப்பலேறிய யோனாவைப் போலவும் உலக மாயைகளில் சிக்குண்டு கிடக்கும் மனிதகுலத்திற்கு "நம்பிக்கை ஆண்டு" கிறிஸ்தவ வாழ்வில் புத்துயிர்ப்பைக் கொடுக்க வேண்டும்.

எத்தனை தடவை விசுவாசப் பிரமாணச் செபத்தை நாம் உச்சரித்தாலும் உள்ளத்தில் நாம் இறைவன் மீது உண்மையான விசுவாசம் கொண்டவர்களாக வாழாது விடின் அதனால் எவ்வித பயனுமில்லை. "உலகம் எம் முன்னால், இயேசு எம் பின்னால்" என்ற எம் வாழ்க்கை முறையை இவ்விசுவாச ஆண்டில் மாற்றியமைத்து இயேசுவை எம்முன்னால் நிறுத்தி உண்மையான விசுவாச வாழ்வு வாழ்ந்து உண்மைக் கிறிஸ்தவர்களாக உலகிற்கு ஒளியாகவும், உப்பாகவும் இருப்போமாக.

"ஆண்டவரே! ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்; என் ஆன்மா குணமடையும்."

**அருட்பணி. எஸ். எயின்சிலி றொஷான்**
ஆசிரியர், "பாதுகாவலன்" கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.
Email : editorkavalan@gmail.com

# ஆறாவது அசிபா மாநாடு

## இயேசுவை பின்பற்றிச் சென்று இறையரசை பரப்புங்கள்
## அன்பியங்களை கட்டியெழுப்புவதன் மூலம் அவருக்கு பணி செய்யுங்கள்

'அசிப்ா அணுகுமுறையை தமது மேய்ப்புப் பணியை மேம்படுத்த பயன்படுத்தி வரும் நாடுகளைச் சேர்ந்த பணியாளர்கள் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை கூடி தமது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வர். அந்த வகையில் அவர்களது 6வது மாநாடு இவ்வருடம் எமது நாட்டில் நடைபெறுகிறது. ஒக்டோபர் 18 - 24 வரை சிலாபத்தில் நடைபெறவுள்ள இம்மாநாட்டின் 18 நாடுகளைச் சேர்ந்த 200 பேர்வரையில் கலந்து கொள்ளவுள்ளனர். இம்மாநாட்டையொட்டி இக்கட்டுரை பிரசுரப்படுகிறது.

**'அசிப்ா என்றால் என்ன?**

'அசிப்ா என்பது ஆசியாவுக்கான ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையின் ஆங்கில வடிவமாகிய Asian Integral Pastoral Approach என்பதன் சுருக்கக் குறியீடாகும். (ASIPA) இது ஆசிய ஆயா மன்றங்களின் சம்மேளத்தினது (FABC) ஒரு குழந்தையாகும். ஆசியத் திருச்சபையை காலத்தின் தேவைகளுக்கேற்ப புதுப்பிக்கும் ஒரு முயற்சியாகவே இந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையை நாம் கருத வேண்டும்.

**இந்த அணுகுமுறை தோன்றிய வரலாறு என்ன?**

பாண்டுங் நகரில் 1990 இல் கூடிய ஆசிய ஆயர் மன்றங்களின் சம்மேளத்தினது ஐந்தாவது பேரவை பங்கேற்கும் திருச்சபை பற்றிய ஒரு கனவை ஆசியாவுக்காக உருவாக்கியது. பங்கு ஒன்றை பல்வேறு அடித்தள குழுமங்களின் (அன்பியங்களின்) சங்கமமாக மாற்றியமைப்பதன் மூலம் இந்த கனவை நனவாக்க முடியும் என எண்ணப்பட்டது. இந்நிலையை புதிய விதமாய் திருச்சபையாய் இருத்தல் என்று பேரவை அழைத்தது. FABCயினது ஐந்தாவது அமர்விலே மேலெழுந்த அந்தக் கனவை நடைமுறைப்படுத்த சில பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இதனை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு ஆசிய ஆயர்மன்றங்களின் சம்மேளனத்தின் கீழ் இயங்கும் பொதுநிலைத் திருத்தூதுப்பணிக்கான ஆயர்களின் அமைப்பிடம் (BILA) ஒப்படைக்கப்பட்டது. 1991ம் 92ம் ஆண்டுகளில் இவ்வமைப்பு நடாத்திய பல்வேறு தேடல்களின் விளைவாக இரண்டு ஒரு மாதகால செயலமர்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டன. இவை தென் ஆபிரிக்கா அனுபவத்திலிருந்து வெளிப்பட்ட 'லும்கோ பயிற்சிகளாக அமைந்திருந்தன.

இதன் தொடர்ச்சியாக 1993 இல் பொதுநிலையினர் திருப்பணிக்கான அலுவலகமும் மனித முன்னேற்றத்துக்கான அலுவலகமும் இணைந்து நடாத்திய ஒரு கலந்தாய்வின் விளைவாக 'அசிபா – ஆசியாவுக்கான ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறை பிறப்பெடுத்தது.

ஆசிய ஆயர் மன்றங்களின் சம்மேளனத்தின் ஐந்தாவது கூட்டத்தொடரில் வடிவமைக்கப்பட்ட ஆசியாவுக்கான பங்கேற்கும் திருச்சபை என்ற கனவை நடைமுறையாக்குவதற்கான ஒரு தொடர் வழிமுறையை வளர்த்துச் செல்வதே 'அசிபா உருவாக்கப்பட்ட பினனணியாகும்.

இன்று ஆசியாவைச் சேர்ந்த 17 நாடுகளில் மேய்ப்புப்பணியை மேம்படுத்தி பங்கேற்புத் திருச்சபையை மலரச் செய்யும் நோக்கோடு 'அசிப்ா அணுகுமுறை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**'அசிபா பொது மாநாடு (ASIPA General Assembly) என்றால் என்ன?**

'அசிபா அணுகுமுறையை தமது மேய்ப்புப்பணியில் பயன்படுத்தும் நாடுகளிலுள்ள 'அசிப்ா ஆர்வலர்கள் ஒன்றிணைந்து நடாத்தும் மாநாடே 'அசிப்ா பொது மாநாடு என்று அழைக்கப்படுகிறது. இதனது நோக்கம் பல்வேறு நாடுகளிலும் இந்த மேய்ப்புப்பணி அணுகுமுறை எத்தகைய பயன்பாட்டைத் தருகிறது என்ற அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதும் இவ்வணுகுமுறையை மெருகூட்டி முன்னெடுத்துச் செல்ல தேவையான ஆலோசனைகளைப் பரிமாறிக் கொள்வதுமாகும். இதுவரை இத்தகைய ஐந்து பொது மாநாடுகள் நடைபெற்றுள்ளன. இந்த வருடம் இலங்கையில் நடப்பது ஆறாவது பொது மாநாடாகும்.

**இதுவரை நடைபெற்ற 'அசிபா மாநாடுகளை சுருக்கமாக அறிமுகப்படுத்த முடியுமா?**

இதன் முதல் பொது மாநாடு 1996ம் ஆண்டு தாய்லாந்தில் நடைபெற்றது. ஆசியாவைச் சேர்ந்த எட்டு நாடுகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டிருந்தன. தமது நாடுகளில் முன்வைக்கப்பட்டு வரும் அசிபா அணுகுமுறையின் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட இந்த நாடுகள் இறுதியாக வெளியிட்ட அறிக்கையில் இரண்டாயிரமாம் யூபிலி ஆண்டை ஆர்வத்தோடு எதிர்நோக்கியிருக்கும் திருச்சபையாகிய நாம் 'அசிபா அணுகுமுறையை சரியாகப் புரிந்து கொண்டு திறமையாக நடைமுறைப்படுத்தினால் புதிய மிலேனியத்தில் புதுப்பிக்கப்பட்ட ஒரு திருச்சபையாக மலர முடியும் என்று குறிப்பிடுகின்றன.

அதன் இரண்டாவது மாநாடும் தாய்லாந்து நாட்டிலே 2000ம் ஆண்டு நடைபெற்றது. இம்மாநாட்டில் ஆசியாவின் 13 நாடுகளிலிருந்து 105 'அசிபா செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டின் தொனிப்பொருளாக "புதிய மிலேனியத்தில் திருச்சபையாக வாழ்வதற்கான ஒரு புதிய முறை" என்ற வாக்கு அமைந்திருந்தது. ஆசியாவின் பல நாடுகளிலும் தமது அயலில் திருச்சபையாக வாழும் சாதாரண ஒரு முறையாக அன்பியங்கள் மாறி வருவதை இம்மாநாடு அவதானித்தது. மேலும் பல ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் திருச்சபையை புதுப்பிப்பதற்கான மிகச்சிறந்த அணுகுமுறைகளுள் ஒன்றாக அன்பியங்களைக் கருதுவதையும் கண்டுகொண்டது.

மூன்றாவது மாநாடு தென் கொரியாவிலே 2003ம் ஆண்டு நடைபெற்றது. "பணிபுரிய வலுவூட்டும் அன்பியங்கள்" என்ற தொனிப்பொருளிலே இம்மாநாடு இடம் பெற்றது. இதனது இறுதி அறிக்கையில் இறையரசின் வழியில் கிறிஸ்தவ குடும்பங்களை வலுவூட்டுவதன் மூலம் நற்செய்தியறிவிப்பில் ஈடுபட அன்பியங்கள் உழைக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டது.

நான்காவது மாநாடு 2006ம் ஆண்டு இந்தியாவில் திருவனந்த புரத்தில் நடைபெற்றது. "குழுமமாக ஒன்றித்திருக்கும் திருச்சபையை நோக்கி அன்பியங்கள்" என்பதே இம்மாநாட்டின் மையப் பொருளாக அமைந்தது. இதில் 14 நாடுகளில் இருந்து வந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டு அன்பியங்கள் எவ்வாறு குழுமவாழ்வை கட்டியெழுப்புகின்றன என்கின்ற விடயத்தை ஆய்வு செய்தனர். இதன் இறுதி அறிக்கையில் அன்பியங்கள் குழுமவாழ்வை மேம்படுத்த மிகச் சிறந்த வழி என நம்புகிறோம் எனக் குறிப்பிடப்படுகின்றது.

ஐந்தாவது மாநாடு 2009ம் ஆண்டு பிலிப்பைன்சில் நடைபெற்றது. "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" என்ற தலைப்பில் அன்பியங்களின் வாழ்வில் நற்கருணையினதும் வார்த்தையினதும் பங்கு பற்றி கவனம் செலுத்தப்பட்டது. 40 ஆண்டு கால அன்பிய அனுபவத்தைக் கொண்ட பிலிப்பைன்ஸ் நாட்டில் இம் மாநாடு இடம்பெற்றது பலருக்கும் பயனுள்ள அனுபவமாயிருந்தது. ஒருவரை இறைவார்த்தியிலும் நற்கருணையில் ஊன்றுவதற்கு அன்பியங்கள் பெரும் பங்காற்ற முடியும் என இம் மாநாட்டின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**இலங்கையில் நடைபெற இருக்கும் ஆறாவது மாநாடு பற்றிய சில தகவல்களை வழங்க முடியுமா?**

இதன் ஆறாவது பொது மாநாடு சிலாபம் மறைமாவட்டத்தில் இவ்வாண்டு ஒக்டோபர் 18-24 வரை நடைபெற உள்ளது. இதில் 20 நாடுகளிலிருந்து வருகை தரும் 200 வரையான 'அசிபா ஆர்வலர்கள் கலந்து கொள்வர். "அன்பியங்களாக இணைந்து யேசுவைப் பின்பற்றி பணிபுரிய செல்லுங்கள்" என்ற தொனிப் பொருளில் இம்மாநாடு நடைபெற உள்ளது. இம்மாநாட்டின் இறுதி நிகழ்வாக இலங்கை மாதா பேராலயத்தில் ஒன்று கூடும் இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களினதும் அன்பியப் பணியாளர்களின் பேரணி ஒன்றும் இடம்பெற உள்ளது.

**ஆசியாவுக்கான இந்த மேய்ப்புப்பணி அணுகுமுறையை முன்னெடுப்பவர்கள் யார்?**

ஆசிய ஆயர் மன்றங்களின் சம்மேளனத்தின் கீழ் இயங்கும் பொதுநிலையினர் அலுவலகத்தின் ஒரு பகுதியாகிய 'அசிப்ா பிரிவின் அனுசரணையோடு இயங்கும் 'அசிபா வளவாளர் குழு (ART) ஒன்று இப்பணிகளை முன்னெடுக்கிறது. ஆசியாவின் பல்வேறு நாடுகளிலும் செயலமர்வுகளை நடாத்துவது, செயலமர்வுகளுக்கான கையேடுகளைத் தயாரித்து வழங்குவது போன்றவை இக்குழுவின் முக்கிய செயற்பாடுகளாகும். இக்குழுவே பொதுமாநாடுகளையும் நெறிப்படுத்தி வருகிறது.

**அசிபா கையேடுகள் பற்றிய சிறிய அறிமுகம் ஒன்றைத் தரமுடியுமா?**

அசிபா கையேடுகள் எனப்படுபவை ஆசியாவுக்கான ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகு

(தொடர்ச்சி 7ம் பக்கம்)

# திருக்குடும்பச்சபை பொதுநிலையினர் வாழ்வும் பணியும்



1862 இல் யாழ் மண்ணில் திருக்குடும்ப சபைச்சகோதரிகள் தாம் தடம் பதித்த 150ஆவது, ஆண்டை நன்றி நிறை இதயங்களுடன் நினைவுகூர்ந்து தம் சபைபற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் எழுதும் தொடர் கட்டுரை. - ஆசிரியர் -

திருக்குடும்பச் சபை நிறுவுனர் பெண்கள் துறவறசபையை ஏற்படுத்த முன்பு பொதுநிலையினர் இளைஞர்கள் வாழ்விலே தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். பிரான்சிய அரசியற் புரட்சியின் பயங்கர விளைவுகளால் மக்களின் சமய, சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வு சிதறடிக்கப்பட்டது. குறிப்பாக இறைமக்களின் விசுவாச வாழ்வும் ஆட்டம் கண்டது. இவர்களது விசுவாச வாழ்வை வளம் படுததுவதற்கு தான் இறைவனிடம் இருந்து பெற்றுக் கொண்ட "அருங்கொடை"யை மக்களோடு பகிர்ந்து கொள்ள தன்னைக் கையளித்தார். கிறிஸ்து மறையுடல் ஏற்ற மறை உண்மையில் மனிதம் மாண்புற, சிதறுண்ட மக்கள் கிறிஸ்துவிலே இணைந்து கொள்ள "இறைவன் மாத்திரம்" என்னும் ஆன்மீகத்தில நிறைவைக் காண விசுவாசத்தையும் அன்பையும் பரப்பி ஐக்கியத்தில் உறுதியான திருச்சபையை உருவாக்க அழைக்கப்பட்டார்.

நிறுவுனரின் காலத்தில் வாழ்ந்த மக்களின் உலகியல், ஆன்மீகத்தேவைகளுக்கு பதிலிறுத்ததின் மூலம் நிறுவுனரும் அவரது உடன் உழைப்பாளர்களும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்த சந்தர்ப்பத்தைப் பெற்றனர். அவர் உபதியாக்கோனாக இருந்தபோதே குருத்துவ மாணவர் சிலருடன் சேர்ந்து மறைக்கல்வி வகுப்புக்களை நடாத்தினார். தனது பணியின் ஆரம்பத்திலிருந்தே நறசெய்திப்பணியில் அத்தியாவசியமானதும், ஈடு செய்ய முடியாததுமான பொதுநிலையினரின் பங்களிப்பை இனம் கண்டு கொண்டார். எல்லாவிதமான கிறிஸ்தவ அர்ப்பணமும் இயேசுக்கிறிஸ்துவிலே கண்டறியப்பட வேண்டுமென்பதில் உறுதி கொண்டிருந்தார். எனவே பியன்வெனு நோஆய் அடிகளார் போர்டோவில் உள்ள "யூலாலி" பங்கிற்குச் சென்றவுடனே வளர்ந்தோருக்கான நிலைமையின் மறைக்கல்வி வகுப்புக்களை ஒழுங்கு செய்தார். இது எல்லோராலும் விரும்பப்பட்டதாகவும் நன்மதிப்புப் பெற்றதாகவும் இருந்ததோடு விரைவாக எங்கும் பரவியது. பரீஸ் பட்டணத்தில் இந்த வகுப்புக்களினால் கிடைத்த நன்மைகளைக் கண்ட பியன்வெனு போர்டோவிலும் எதிர்பார்த்தார். 1819ம் ஆண்டு கார்த்திகை மாதம் 21ம் நாள் இது இடம் பெற்றது. நோஆய் அடிகள் பல்வேறு நிலையில் உள்ளவர்களை வயது, சமூகநிலை, தகுதி என்பவறறிக்கேற்ப பிரித்து அவர்களுக்கான ஒழுங்குகளையும் எழுதினார். 1820ம் ஆணடு இந்த மறைககல்வி வகுப்பு ஒரு கழகமாக உருவாகவேண்டுமென்று திருச்சபையின் தலைமைப்பீடத்திலிருந்து அனுமதியைப் பெற்றுக் கொண்டார். அவருடைய இளைய சகோதரி "வனி" ஆயத்த நிலையில் இருந்தா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருசில பக்தி முயற்சிகளைப் பயன்படுத்தி செபத்தின் மூலம் முழுக்குழுவுடனும் இணைந்திருந்தார். திருக்குடும்பசபையின் பொதுநிலையினர் அழைப்பு என்பது இறைவனிடமிருந்து கொடுக்கப்படும் அழைப்பு. இது இறைவனின் கொடையாக இருக்கின்றது. தமது திருமுழுக்கின் அருளை நிறைவாக வாழ்வதற்கு இந்த ஆன்மீக அப்போஸ்தலிக்க குடும்பத்தில் தம்மை அர்ப்பணிக்கும் அழைப்பு. இவர்கள் திருக்குடும்பத்தின் வாழ்வையும், ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்வையும் தொடர்ந்து வாழ அழைக்கப்படுகின்றார்கள். நம்பிக்கையும், சகோதர அன்பும், ஏழ்மையும், சாந்தம், தாழ்மை, எளிமை, என்னும் பண்புகளைப் பின்பற்றி சபையின் மனப்போக்கில் வாழ்கிறார்கள். இவர்களது வாழ்வில் நற்கருணையும், இறைவாத்தையும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. ஓர் அங்கத்தவர் தனது நாளாந்த குடும்ப, சமூக தொழில் அல்லது வேறு ஈடுபாடுகள் சம்மந்தமான வாழ்வினை கிறிஸ்தவ முறையில் வாழ்ந்து தன்னால் இயலுமான வழிகளில் விசுவாசத்தைப் பரப்புவதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றார். நிறுவுனர் காலத்தில் 2500 பொதுநிலையினர் வாழ்ந்திருக்கின்றனர். அவரது மறைக்கல்வி வகுப்புக்களில் இணைந்து கொண்ட இளம் பெண்களில் சிலர் தான் துறவிகளாக வரவிரும்பி திருக்குடும்ப சபைக்கு வித்திட்டார்கள்.

### யாழ்மாகாண திருக்குடும்ப பொதுநிலையினர்

யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக 1977ம் ஆண்டு மானிப்பாயில் இரு அருட்சகோதரிகள் 7 பொதுநிலையினருடன் மானிப்பாய் தியான இல்லத்தில் ஆரம்பிததார்கள். சபையின் ஆரம்ப அறிவையும், அதன் நோக்கம் ஆன்மீகம் என்பவற்றை அறிமுகம் செய்து அந்த அங்கத்தினரை உருவாக்கினர். காலப்போக்கில் ஒவ்வொரு பங்குத்தளத்திலிருந்தும் சகோதரிகளின் வழியாக அங்கத்தவர்தள் இணையத் தொடங்கினர். இவர்களுக்கென்றே பிரத்தியேகமான கையேடுகள், ஒழுங்கு விதிகள், இவ்வித அழைத்தலில் கொண்டிருக்க வேண்டிய குணாதிசயங்கள், அனுசரிக்கப்படவேண்டிய சட்டதிட்டங்கள் காலத்துக்குகாலம் உரோமில் நடக்கும் பொதுசங்கங்களின் பயனாக அனுப்பப்பட்டு வருகின்றன. சகோதரிகள் பொறுப்பாக இருந்து இவர்களை உருவாக்கி, ஊக்குவித்து, வலுவூட்டி வருகிறார்கள், சபையின் அமைப்புகளுக்குட்பட்டு ஆசியாக்கண்டத் தலைவர், இலங்கை தேசிய தலைவர், வலயங்களின் தலைவர் என்ற ரீதியில் தெரிவு செய்யப்பட்டு இவர்களுக்குப் பொறுப்பாக இருக்கிறார்கள்.

மாதாந்த ஒன்றுகூடல் அமர்வுகளால்

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

தகவல்
யூபிலிவிழா அமைப்பாளர்,
யாழ்-மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம்.

(தொடரும்)

# எமது வார்த்தையாலும் வாழ்வாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்

கிறிஸ்து இயேசுவே மேன்மையான மறையறிவிப்பாளர். வழிதவறி, பாவிகளாய் அலைந்து திரிந்த மனிதனை மீண்டும் இறைவனிடம் அழைத்துச் செல்ல தம் தந்தையால் மனுக்குலத்தின் மீட்பராக இவ்வுலகிற்கு அனுப்பப்பட்டார். ஆகையால் தான் கிறிஸ்துவே மறையறிவிப்புப் பணிகளின் முன்னோடி என்பதை நாம் காண்கின்றோம். அவர், தனக்களிக்கப்பட்ட பணியை இவ்வுலகில் தன் வார்த்தைகளாலும் மறைபரப்புதலினாலும் செயற்பாடுகளாலும் மிகச் சிறப்பான முறையில் மனுக்குலத்தின் நன்மைக்காக செய்தார். உலகில் தனது பணிவாழ்க்கை முடிவுறும் காலகட்டத்தில் தன் பணியை தன் சீடர்களிடம் அதாவது திருச்சபையிடம் கையளித்து மீட்பின் நற்செய்தியை அறிவிக்கவும் இறையரசின் நற்செய்தியை அறிவிக்கவும் இறையரசின் மதிப்பீடுகளையும் இறைத் தந்தையின் அன்பையும் பறைசாற்ற அழைத்தார்.

- "தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன்" (யோவான் 20:21)
- "எனவே நீங்கள் போய் எலலா மக்களினத் தாரையும் சீடராக்குங்கள்" (மத்தேயு 28:19)
- "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும யூதேயா, சமாரியா முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்" (தி.பணி. 1:8)

இவ்வனைத்து நற்செய்தி வசனங்களும் எமக்கு தெளிவாக எதைக்காட்டுகிறது என்றால் இறைமகன் கிறிஸ்து தனது திருச்சபையை ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர், இளைஞர், வயோதிபர் ஏன் குழந்தைகளையும் கூட தனக்கு சாட்சி பகரும்படி அழைத்துள்ளார். எனவே முழுத் திருச்சபையும் ஒரு மறையறிவிப்பு திருச்சபையாகும். திருமுழுக்கின் மூலம் கிறிஸ்து மீட்பரின் சாட்சிகளாக வாழ நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

அனைத்து கிறிஸ்தவர்களும் இயேசுவில் விசுவாசம் கொண்டுள்ளோம். பல தடவைகளில் அவரைப் பற்றி வாசித்தும் கேள்விப்பட்டும் உள்ளோம். எனவே, அவரை நாம் அறிவோம். அவரிலும் அவர் படிப்பினைகளிலும் நம்பிக்கையுள்ள போதிலும் எம்மில் பலர் அவரின் போதனைகளுக்கு ஏற்ப வாழ்வதில்லை. திருப்பாலத்துவ சபையில் குழந்தைகள் சிறுவயதிலிருந்தே இயேசுவை அறியவும் கிறிஸ்துவை வாழவும் அவ்வாறு வாழ்வதன் மூலம் தங்கள் நண்பர்களுக்கும் கிறிஸ்துவை அறிமுகமாக்கவும் அவர்கள் பயிற்றுவிக்கபபடுகின்றார்கள். நாம் சிறுவயது முதலே இயேசுவை எம்மில் ஏற்று வாழ பழகாவிடில் பெரியவர்களான பின்பு அவருக்கு சாட்சிபகர தவறிவிடுவோம் என்பதை அப்போஸ்தலரான புனித. யாக்கோபு எமக்கு மிகத் தெளிவாக கூறியுள்ளார்.

அவர் கூறுகின்றார்:

**மறைபரப்பு தினம்**
**21 ஒக்டோபர் 2012**

- "அறிவிலிகளே,செயலற்ற நம்பிக்கை பயனற்றது என நான் எடுத்துக்காட்டாக வேண்டுமா?" (யாக்கோபு 2:20)
- "அதைப்போலவே நம்பிக்கையும் செயல் வடிவம் பெறா விட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும்" (யாக்கோபு 2: 17)
- "உயிர் இல்லாத உடல் போல செயல்கள் இல்லாத நம்பிக்கையும் செத்ததே" (யாக்கோபு 2: 26)

உலக மறைபரப்பு ஞாயிறு தினத்திற்கான இவ்வருட கருப்பொருளானது:

"எமது வார்த்தையாலும் வாழ்வாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாவோம்"

எனவே கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தை வார்த்தைகளுள் மட்டும் அடக்கிவிடாமல் முதல் கிறிஸ்தவர்களின் பாதச் சுவடுகளில் நடந்து எமது வாழ்வின் மூலம் எம் தலைவரும் குருவுமான கிறிஸ்துவுக்கு சாட்சிபகர முன்வருவோம். ஆதிக்கிறிஸ்தவர்களின் வாழ்க்கை முறைகளைப் பற்றி அப்போது வாழ்ந்த உரோமையர்கள் மிகவும் புகழ்ந்தார்கள். "கிறிஸ்தவர்கள் எவ்வளவு அழகாக ஒருவர் ஒருவருடன் வாழ்கிறார்கள் என்பதைப் பாருங்கள்" இதே வார்த்தைகளை இக்காலக் கட்டத்தில் கிறிஸ்தவர்கள் அல்லாத எமது வேற்று மத சகோதரர்களிடமிருந்து கேட்கக்கூடியதாக உள்ளதா!!!

இறுதியாக எம் ஆண்டவரின் வார்த்தைகளை எம்முள் எதிரொலிக்கச் செய்வோம்.

- "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாயிருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்று போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்?" (மத் 5:13)
- "நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள். மலைமேல் இருக்கும் நகர் மறைவாய் இருக்க முடியாது" (மத் 5:14)
- "உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க! அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக் கண்டு உங்கள் விண்ணகத் தந்தையைப் போற்றிப்புகழ்வார்கள்" (மத் 5:16)

விசுவாசத்தின் ஆண்டான இவ்வருடத்தில் நாமும் எமது விசுவாசத்தை திடப்படுத்துவோம். அவ்வாறு எமது விசுவாசம் உறுதிப்பெற்று செயற்திறனுடன் மற்றவர்களுக்கும் ஒளி வீசுவதாக அமையட்டும்.

இவ்வருட உலக மறைபரப்பு ஞாயிறு தினத்திற்கான இறைவனின் அழைப்பு என்னவென்றால் எமது வார்த்தையாலும் வாழ்வாலும் கிறிஸ்துவின் சாட்சிகளாக மாறுவதே.

*இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக. தேவ அன்னை உங்களை பாது காப்பாராக.*


அருட்பணி. ரெஜினோல்ட் சபரமாது
தேசிய இயக்குனர்,
பாப்பிறை மறைபரப்புச் சபைகள்.

# போர்டோவின் திருக்குடும்பச் சபையின் முக்கிய பதிவேடுகள்

அருட்சகோதரி. யுஸ்ரீனா -
"ஆவணக்காப்பாளர்" யாழ் மாகாண இல்லம்

| | |
|---|---|
| சபையின் ஆரம்பம் | - 1820ம் ஆண்டு வைகாசி 28ந் திகதி மூவொரு கடவுளின் பெருவிழா நாள் |
| சபையின் நிறுவுனர் | - வண. பீற்றர்பியன் வெனு நோ ஆய் அடிகள் |
| சபையின் பெயர் | - போர்டோவின் திருக் குடும்பச சபை. |

## சபையின் அழைபுக்கள் ஐந்து




## உலகளாவிய குடும்பம்

| | | |
|---|---|---|
| 1. பிரான்ஸ் | - | 1820 |
| 2. ஸ்பெயின் | - | 1843 |
| 3. பெல்ஜியம் | - | 1854 |
| 4. இலங்கை | - | 1862 |
| 5. தென் ஆபிரிக்கா | - | 1864 |
| 6. லெசெத்தோ | - | 1865 |
| 7. இங்கிலாந்து | - | 1868 |
| 8. அயர்லாந்து | - | 1868 |
| 9. ஸ்கொட்லாந்து | - | 1868 |
| 10. இத்தாலி | - | 1870 |
| 11. கனடா | - | 1901 |
| 12. பிறேசில் | - | 1908 |
| 13. போலாந்து | - | 1934 |



| | | |
|---|---|---|
| 14. சயீர் | - | 1948 |
| 15. கமறூன் | - | 1949 |
| 16. பரகுவே | - | 1965 |
| 17. சாட் | - | 1965 |
| 18. ஆர்ஜென்ரீனா | - | 1971 |
| 19. பாகிஸ்தான் | - | 1975 |
| 20. பெரு | - | 1977 |
| 21. இந்தியா | - | 1978 |
| 22. பிலிப்பைன்ஸ் | - | 1985 |
| 23. பொட்ஸ்வானா | - | 2003 |
| 24. உகண்டா | - | 2003 |
| 25. றுவெண்டா | - | 2003 |

## திருக்குடும்பச் சபையின் நோக்கம்

- எல்லாச்சூழல்களிலும் விசுவாசத்தைப் பரப்பி உறுதிப்படுத்துவது.
- ஒரே உள்ளமும், ஒரே ஆன்மாவும் கொண்டுவிளங்கிய ஆதிக்கிறிஸ்தவர்களின் சாட்சியத்தைப் புதுப்பிப்பது.

| | |
|---|---|
| சபையின் ஆன்மீகம் - | இறைவனுக்கு மாத்திரமே மகிமை |
| சபையின் மாதிரிகை - | திருக்குடும்பம் ஆதிக்கிறிஸ்தவர்கள் |
| சபையின் அருங்கொடை- | ஐக்கியத்தை உருவாக்கல் |

✠ இலங்கையின் முதற்பெண் துறவிகளாகிய திருக்குடும்ப ஐரோப்பிய சகோதரிகள் அறுவரின் யாழ் வருகை 1862ம் ஆண்டு கார்த்திகை 2ந் திகதி இடம் பெற்றது.

✠ மாறி சேவியர் மாஷாங், மாறி ஸ்ரனிஸ்லாஸ் குயின், மாறி கெலன் உவின்ரர், மாறி திரேஸ் வான்மோஸ், மாறி யோசெவ் மாறோஅ மாறி லிகோறி றோஜர்.

✠ ஆயர் சமேரியாவுடன் வருகை தந்த இவர்களுக்கு தமிழ் மணம் கமழ நாதகீதவாத்திய மேள தாளங்களுடன் கடல் கடந்து வந்த கன்னியரை யாழ். மக்கள் தமிழ்பண்பாட்டில் வரவேற்றனர். யாழ். வரலாற்றிலே ஒருபொன்னாள். அன்று நகரெங்கும் விழாக் கோலம்.

## திருக்குடும்பச்சபை இலங்கைக்கு வரக் காரணிகளாக இருந்தவர்கள்

1. மேன்மைதங்கிய ஆயர் சமேரியா- யாழ் லிக்கார் O.M.I



2. சபை நிறுவுனர் - வண. பீற்றர்பியன்வெனு நோ ஆய் அடிகள்



3. அ.ம.திகள் சபை நிறுவுனர் - புனிதர் - யூஜின் டி மசனெட்



ஏற்கனவே யாழ். 3ம் குறுக்குத் தெருவின் அண்மையில் வாடகைக்கு அமர்த்திய எளிமையான வீடு களில் சமேரியா ஆண்டகை இவர்களுக்கு வதிவிடம் அளித்தார். இவர்கள் பலவிதமான கஷ்டங்கள், பற்றாக் குறைகளை அனுபவித்து தங்களது வருகையின் நோக்கத்தை நிறைவேற்றிவந்தனர். சிறுவர் இல்லம், விடுதிக்கழகம், பாடசாலைகளை நிறுவி சகோதரிகளின் குழுமவாழ்வையும் அமைத்து வாழ்ந்துவந்தனர். புனித. சூசையப்பர் பெயரால் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்து பற்பல கைத்தொழில்கள், அலங்கார வேலைகளைப் படிப்பித்தனர். துறவற அழைப்பை விரும்பிய இளம் பெண்களுக்கு நவசந்நியாச இல்லம் அமைத்தார்கள்.

1865ம் ஆண்டு பல சுதேச சகோதரிகள் துறவற வாழ்வில் இணைந்து 1867ம் ஆண்டு 3 சகோதரிகள் முதல் வாக்குறுதி செய்துகொணடனர். சிஸ். கபிரியேலா, சிஸ். மைக்கோப், சிஸ். ஏஞ்சல் மூவருமே யாழ். திருக்குடும்பச் சபையின் முதல் இராயப்பர் கிளைச சகோதரிகளாவர். இவர்களைத் தொடர்ந்து சகோதரிகள் அதிகரித்து வந்தனர். 1870 ஆண்டு குருநாகலுக்குச் சில சகோதரிகள் சென்றனர். மதர். சேவியர் மாஷாங் முதற்தலைவி 1878ம் ஆண்டு ஐப்பசி 15ம் திகதி இறைவனடி சேர்ந்து விட்டார். அவரின் பின் சகோதரிகள் எமிலி, யோசேப்பின் பிறக்சீட் இன்னும் பலர் தலைமை வகித்து சபையின் நிர்வாகத்தை மேற்கொண்டனர். 1881ம் ஆண்டு திருகோணமலையில் ஒரு மடம் திறக் கப்பட்டது. 1882ம் ஆண்டு யாழ். மடத்தில் பெண்கள் ஆசிரியர் கல்லூரி திறக்கப்பட்டது. 1870ம் ஆண்டு யாழ். மடம் திறக்கப்பட்டு இவர்களுக்கு வசதியான வதிவிடமாகியது. சகோதரிகளும், பணிகளும் விரிவடைநதனர். 1896ம் ஆண்டு இளவாலை மடம் திறக்கப்பட்டு நவகன்னியர் அங்கு சென்றனர். 1929ம் ஆண்டு ஆசிரிய கல்லூரியும் அங்கு சென்றடைந்தது. சிறுவர் இல்ல மும் 1939ம் ஆண்டு இளவாலைக்குச் சென்றுவிட்டது. காலப்போக்கில் இளவாலை ஒரு பெரிய தாபனமாக தமிழ்ச் சகோதரிகளுக்கு பயன் அளித்தது. 1905ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இருந்து இளவாலை தனித்துவமான தாபனமாக மாறியது.

ஆற்றலும் திறமையும் ஆன்மீகமும் கொண்ட நல்ல தலைவிகள் பிறக்சீட் கிளமென்ற், தியோப்பில், விக்ரறின் தியோப்பான், செபஸ்ரியன், சலோமை கிளேயா போன்ற அர்ப்பணம் நிறைந்த தலைவிகள், யாழ்ப்பாணம், இளவாலை தாபனத்தை நடாத்தி வந்தனர். இதன் பயனாக இன்று 150ம் வருட நிறைவில் வளர்ச்சியும், உயர்ச்சியும் பெற்று திருக்குடும்பச் சபை இலங்கையின் எல்லா மறை மாவட்டங்களிலும் வட, தென் பகுதிச் சகோதரிகள் "இறைவனுக்கே மகிமை" என்று இதயகீதம் இசைத்து மகிழ்கின்றனர்.

## சபையின் பணியை யாழில் தொடங்கிய எம் மூத்த சகோதரிகள்



அருட்சகோதரி. விசிற்றேஷன் 12 வருடங்களாக யாழ் - மாகாணத் தலைவி



அருட்சகோதரி. யோசேப்பின்ரைனன் யாழ் - மடம் இறுதியான அதிபர்



அருட்சகோதரி. கிளேயா யாழ் - மடத்தலைவி



அருட்சகோதரி. சலோமை தெய்னாட் இளவாலை மடத்தலைவி 18 வருடங்கள்



அருட்சகோதரி. சபைத்தலைவி ஜோய் சிமித்



அருட்சகோதரி. கொன்செப்ஷன் நவசந்நியாசத்தலைவி 34 வருடங்கள்

✡ 1957ம் ஆண்டு நடைபெற்ற பொதுச் சங்கத்தின் விளைவாகச் சபையில் மாகாண அமைப்பு (Province) நிர்வாகம் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பயனாக இலங்கையில் கொழும்பு, யாழ்ப்பாணம் என்னும் இரு மாகாணங்கள் உருவாகியது. 1958ம் ஆண்டு புரட்டாதி 12ந் திகதி மாகாண நிர்வாகம் ஆட்சிமுறை தொடங்கியது.

## மாகாணத் தலைவிகள்

1. அருட்சகோதரி. விசிற்றேஷன் உவேலன் (அயர்லாந்து)
2. அருட்சகோதரி யூளாலி கபிரியேல்
3. அருட்சகோதரி புஷ்பம் ஞானப்பிரகாசம்
4. அருட்சகோதரி காமலிற்றா அம்புறோஸ்
5. அருட்சகோதரி கிறிஸ்ரபெல் இளையதம்பி
6. அருட்சகோதரி மாறி ஜோசெவ்
7. அருட்சகோதரி சோவ்யா பஸ்ரியாம் பிள்ளை
8. அருட்சகோதரி அன்சில்லா ஜேம்ஸ்
9. அருட்சகோதரி யோலண்ட் மத்தயாஸ்

## நல்ல பிதாவின் பொன்மொழிகள்

1. இயேசு, மரி. சூசை மூவரும் இறைவனை மாத்திரமன்றி, வேறெதையும் நேசிக்கவுமில்லை, தேடவுமில்லை, ஆசிக்கவுமில்லை.

2. புனித. சுல்பீஸ் சிற்றாலயத்தில் தேவதாயின் சுருவத்தின் முன்பெற்ற மனமாற்றத்தின் அனுபவம். அவள் என்னை அழைத்தாள், அவளுடைய குரலைக் கேட்டேன், எனக்கு வழியைக் காட்டினாள், அனைத்தையும் புரிந்துகொண்டேன்.

3. அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும், அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள்.

4. நீங்கள் இவ்வுலக பற்றுக்கள் அனைத்திலும் இருந்து விடுபடுவதன் மூலம் ஏழ்மையைத் தழுவ வேண்டும். உங்கள் ஏழ்மையின் தரத்திற்கேற்ப அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

5. என்னுடைய பிள்ளைகள் என்னுடைய பாக்கியம். இறைவனின் அன்பின் கொடை.

6. அன்பான பிள்ளைகளே! அடிக்கடி நசரேத்துக்குச் செல்லுங்கள். எப்பொழுதும் இயேசு மரி, சூசை உங்கள் மத்தியில் இருக்கிறார்களென நினைத்துக் கொள்ளுங்கள்.

7. திருக்குடும்ப உறுப்பினர்கள் தங்கள் செயல்கள் அனைத்தையும் கருணை, பரிவு என்னும் ஆடைகளால் அணிந்திருக்க வேண்டும்.

8. பிறரன்பு இனிமையும், தயாள குணத்தையும் கொண்டுள்ளது.

9. நான் எப்பொழுதும் ஏழையாக இருக்கவும், இறக்கும் பொழுதாயினும் ஏழையிலும் அதிகம் ஏழையைப் போல் இறக்க இன்னொருவரம் தாரும். இதுவே எனது பற்றுதல் உள்ள விருப்பம். ஓ! இறைவா.

10. மரணவேளையில் தம்மைச் சூழந்து நின்ற சகோதரிகளுக்கு அளித்த இறுதி ஆசிச்செய்திகள் - பிறரன்பு, பக்தி, தன்னலமற்ற தியாகம், தேவன் மாத்திரம் இவைகளே எம் குடும்ப உயிர்.



அருட்சகோதரி. செபஸ்ரியன்



1955ம் ஆண்டு இலங்கையைத் தரிசித்த சிஸ். கிளோயாடிய யூலியன்



அருட்சகோதரி. சபைத்தலைவி மேரி சிலேவன்



அருட்சகோதரி. கொலம்பானஸ்

# திருக்குடும்பச் சகோதரிகள் ஆற்றிவரும் அப்போஸ்தலிக்க பணிகள்

கல்விப்பணி, பங்குத்தளப்பணிகள், மறைக்கல்விப் பணி, இளைஞர் தலைமைத்துவப்பயிற்சி, முன்பள்ளி, சிறுவர் இல்லங்கள், விடுதிக்கழகம், தொழுநோயாளர் பராமரிப்பு, இளம்விதவைகளின் வாழ்வாதாரம், உளவளத்துணை, வைத்தியசாலைச் சந்திப்பு, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பணி, ஜெய்ப்பூர், மாற்றாற்றல்பணி. கிராமிய சுகநலப்பணி. பெண்கள் முன்னேற்றப்பணி, அகதிமுகாங்கள், குடும்ப நலப்பணிகள்.

யாழ் - மாகாணத்தைச் சார்ந்த ம .ங்கள்

| | | |
|---|---|---|
| 01 | யாழ் மறை மாவட்டம் | 21 |
| 02 | மன்னார் மறை மாவட்டம் | 10 |
| 03 | திருமலை மறை மாவட்டம் | 01 |
| 04 | மட்டக்களப்பு மறை மாவட்டம் | 03 |
| 05 | கண்டி மறை மாவட்டம் | 02 |
| 06 | பதுளை மறை மாவட்டம் | 02 |
| 07 | கொழும்பு மறை மாவட்டம் | 03 |
| | | 42 |

கடந்த 150 வருடங்களுக்குள் திருக்குடும்பச் சகோதரிகளின் கல்விப்பணித் தளங்கள்

| | | |
|---|---|---|
| 01 | யாழ்- மாவட்டம் | 35 |
| 02 | கிளி - முல்லை மாவட்டம் | 12 |
| 03 | மன்னார் மாவட்டம் | 14 |
| 04 | திருமலை மாவட்டம் | 03 |
| 05 | மட்டக்களப்பு மாவட்டம் | 08 |
| 06 | மலைநாடு | 06 |
| 07 | கொழும்பு | 08 |
| 08 | புத்தளம் | 02 |
| 09 | சிலாபம் | 01 |
| 10 | போளவத்தை | 01 |
| 11 | தோப்பு | 01 |
| | | 91 |



அருட்சகோதரி. மாகிறேற் முல்டுன் இன்றைய சபைத்தலைவி



அருட்சகோதரி. யோலண்ட் மத்தயாஸ் இன்றைய யாழ் மாகாணத் தலைவி

## வண. சேவியர் மாஷாங் தாயார் அவர்களுக்கு முப்பொன்விழா அஞ்சலி



பழம்பெருமை மிகு பேர்டோ நகரின்
புதுமை மிகு மாஷாங் மரபில்
அழகு நிறை அருங் குழந்தையாக
அவதரித்த சேவி சேவியர் தாயாரே!

இளமையுடன் கன்னிமையும்
இறைவனுக்கு மாத்திரமே மகிமையென்று
ஆண்டவனுக்கு உம்மை அர்ப்பணித்து
அவரையே அனுபவித்த ஆன்மீக அடியாளே!

நிறுவுனரின் உடனிருப்பின்
நினைவுகளை உள்ளத்தில் உள்வாங்கி
கடல் கடந்து செல்வீரென்ற
கனவுகளை நனவாக்க முன் வந்தீர்

இலங்கைத் திருநாட்டின் யாழ் - மண்ணில்
காலடி பதித்த காலம் தொட்டு
உத்தம துறவியாக ஒப்பற்ற தலைவியாக
ஓயாத உழைப்பால் உம்மைக் கரைத்தீர்

இரங்கும் பரிவன்புடன் இறைவனுக்காக
இளம்பெண்களை இராயப்பர் சகோதரிகளாக உருவாக்கி
இறைமக்களுக்கு எங்கும் பணி செய்ய
சுழமண்ணுக்களித்த இறவாத புகழுடைத்தாயே!

முப்பொன் விழாவை மகிழ்வுடன் கொண்டாட
காரணியான கதாநாயகியே தாயே
உம்மை வாழ்த்திப் போற்றுகின்றோம்
புனிதர்கள் உறவில் பரிந்துரைக்க வேண்டுகின்றோம்

எங்கள் இல்லங்களில் உமது பிரசன்னம்
என்றும் நிழலிட நினைவு மலராக
உமது திரு உருப்பார்த்து வழிநடக்க
இறைஞ்சுகின்றோம் உம் பிள்ளைகள் நாம்.

## நான் சந்தித்த முதல் துறவி (ஓர் அனுபவக் குறிப்பு)

1976ம் ஆண்டு முருங்கன் கிறிஸ்து அரசர் முன்பள்ளியில் முதலாம் வகுப்பு படிக்க முருங்கன் வித்தியாலயத்திற்கு வந்த காலம் அப்போது எனக்கு வயது ஆறு. சோதி ரீச்சரோடு ஒரு வெள்ளை அங்கி தரித்த துறவி எங்கள் வகுப்பிற்கு வருவார். அந்த அருட்சகோதரியைப் பார்ப்பதிலும், அவருடன் பேசுவதிலும், அவரிடம் கல்வி பயில்வதிலும் சிறுவர்களாகிய எங்களுக்கு பெரும் மகிழ்ச்சி. இந்தச் சகோதரி தான் அருட்சகோதரி. தெரசிற்றா. இச்சகோதரியின் குடுகுடுத்த வேகமான நடையினை இப்போதும என் மனம் எண்ணிப் பார்க்கிறது. எளிமையான தோற்றம், கனிவான பார்வை, இனிமையான பேச்சு, அன்பான அணுகுமுறை, சிரித்த முகம் எப்பொழுதும் எங்களுக்கு பெரும் வரப்பிரசாதம். எங்களுடைய சிறுவயதுக் குளப்படிகளையெல்லாம் கண்டும் கண்டுகொள்ளாத மனமும், குறைகளைப் புன்முறுவலுக்குள் மறைத்துக் கொள்கின்ற பாங்கும் எங்களை இச்சகோதரியின் பால் ஈர்த்தன. துறவிகள் என்றால் இப்படி தான் இருப்பார்கள் என்று நான் சிறுவயதிலே இந்த அனுபவத்தைப் பெற்றுக்கொண்டேன். கடமை உணர்வு, மற்றவர்களை மதிக்கின்ற பண்பு, சேவை மனப்பான்மை, தாழ்ச்சி நிறைந்த உள்ளம், மகிழ்ச்சியான மனோபாவம், சகிப்புக் குணம், ஆன்மீக வாஞ்சை போன்ற பண்புகளை ஒரு கணம் மீட்டிப் பார்க்கிறேன். திருக்குடும்பச் சகோதரிகள் முப்பொன் விழாவைக் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் போல நூற்றுக்கணக்கான திருக்குடும்ப சகோதரிகளின் தியாக சேவைகளுககு சாட்சியாக இச்சிறுகுறிப்பினை அருட்சகோதரி தெரசிற்றா அவர்கள் பற்றி வரைவதில் வாசகர்களோடு பகிர்வதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகின்றேன். அருட்சகோதரி ரெசிற்றா போன்ற புனிதமான பெண் துறவிகள் திருக்குடும்பத்தில் தொடர்ந்து உருவாக நல்வாழ்த்துக்கள். **செ. அன்புராசா, அ.ம.தி, அடிகள்**

# முல்லைத்தீவில் மரியாயின்சேனை கியூறியா

முல்லைத்தீவு இராயப்பர் ஆலயத்தில் 24-09-2012 திங்கள் மரியாயின் சேனையாரின் புனருத்தாரண கூட்டத்தை ஆரம்பித்து, வரவேற்புரை நிகழ்த்திய பங்குத் தந்தை எஸ். அன்ரனிப்பிள்ளை கடந்த கால போர் சூழலினால் சிதைந்து போன மரியாயின் சேனை கியூறியா மீளப் புனரமைக்கப்பட்டது. இம் மக்களின் ஆன்மீக வாழ்வை மேம்படுத்த பேருதவியாக விருக்கும் என்று குறிப்பிட்டார்.

யாழ்ப்பாண மாவட்ட கொமிற்சிய ஆன்மீக இயக்குனர் றெஜி ராஜேஸ்வரன் பேசுகையில் கடந்த கால போரினாலும், இயற்கை அனர்த்தங்களினாலும் பெரும் துன்பங்களை அனுப வித்து வாழும் உங்களுக்கு மரியாயின் சேனை வாழ்க்கை முறை அமைதியும் ஆறுதலுமளிப்பதாக அமையுமென்றும், துன்பப்படுபவாகளிடையே எமது சேனை பணிகள் தொடர வேண்டும் என்றும் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு கிறிஸ் துவை அறிவிக்க வேண்டியது எமது கடமையென்றும் கூறினார்.

மேலும் தொடர்ந்து தமதுரையில் மரியாயின் உள்ளம் அன்பினால் எவ்வளவு தூரம் நிரம்பப்பெற்றதெனில், அன்பே உருவான ஆண்டவனைக் கருக்கொண்டு ஈன்றெடுக்க அவர் தகுதியுடையவராக கருதப்பட்டார். மரியன்னை மீது ஆழ்ந்த பக்தி கொண்டு, அவரை எல்லாவற்றிற்கும் மேலாக கண்டு பாவிப்பது தான் சேனையாரின் உயிர் நாடி போன்ற பண்பு. ஆகவே அவரிடம் விளங்கிய அன்பு, பொறுமை, தாழ்மை, எளிமை சேனையாரிடமும் புலனாக வேண்டும். சேனையார் சமுகத்தில் புளிக்காரம் போன்று மேலான காரியங்களைச் சாதிக்க வேண்டும் என்று கூறினார்.

கொமிசிய தலைவி யோச் புஸ்பசீலி சேனைக் கூட்டங்கள் சேனைப் பணிகள் என்பவற்றை வற்றாப் பளை சேனை தலைவி எஸ். யஸ்மின் தலைமையில் இயங்கும் சேனையாருடாக செயற்படுத்திக் காட்டினார்.

இக்கூட்டத்திற்கு முல்லைத்தீவு, முள்ளிய வளை, வற்றப்பாளை, அலம்பில், கூளாமுறிப்பு, மாமுளை போன்ற இடங்களிலுள்ள மரியாயின் சேனையார் பல கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந் தாலும், பங்குபற்றியது பலராலும் பாராட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் உபதலைவர் எம்.எம். குலநாயகம், செயலர் புனிதம் அருளானந்தம், யே. ஈ. இராசநாயகம் ஆகியோரும் பங்குபற்றினர்.


மேரி திரேசா - அருளானந்தம்

திருமண வைர விழா

29-10-2012

வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்



இறைவா எமது பெற்றோரின் 60 வருட திருமண வாழ்வில் நீர் அவர்களுக்குப் பொழிந்த சகல ஆசீர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவர்களை இறைவனின் அன்புப் பராமரிப்பிலும், புனித ஆரோக்கிய அன்னையின் அரவணைப்பிலும் ஒப்படைத்து, அவர்கள் நிறை ஆரோக்கியமாக வாழ வாழ்த்தி நிற்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள், சகோதரர், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை, உற்றார், உறவினர், நண்பர்கள்.

67 St Johns Way Colombo-15 - Tel: 2529176, 2526379

Add: 91/12


## திருக்குடும்பச்சபை...(3ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்கள் ஒருங்கிணைந்து பகிர்ந்து கொள்வதால் விசுவாச வாழ்வை உறுதிப்படுத்தி அன்புறவையும் சபையின் ஐக்கியத்தையும் பெற்று தங்களை அர்ப்பணிக்கின்றனர். இவர்களுக்கென்றே பிரத்தியேக "வாழ்வுக்கு ஒரு வழி" என்ற ஒழுங்கு நூலும் உண்டு. இதன் சட்ட திட்டங்களை இயலுமான வரை அனுசரித்து வாழ்வர். இவ் வாறு இறை அருளால் பல வழிகளிலும் வளர்ச்சியடைந்த யாழ்-மாகாண பொதுநிலையினர் ஏறத்தாள 650 பேர் மிக்கஆர்வத்துடன் பணியாற்றுகின்றனர். அத்துடன் 16 வலயங்களை உள்ளடக்கி 43 இடங்களில் தமது அழைப்பையும் பணியையும் விரிவாக்கி தமது அழைத்தலை அர்த்தமுடன் வாழ்கின்றனர். வருடாந்த தியானம், ஒன்றுகூடல்கள், சபையின் ஏனைய அழைத்தல் அங்கத தவர்களுடன் இணைந்து பங்கு பற்றும் குடும்ப விழாக்கள், சுற்றுலா, இன்ப துன்ப நிகழ்வுகளில் பங்கு பற்றுதல் போன்றவற்றில்தான் பியன்வெனு நோ ஆய் குடும்பத்தின் உறவைப் பலப்படுத்துகின்றனர். இவர்கள் தங்களுக்கே உரித்தான "உறவின் பாலம்" என்னும் ஒரு கைநூலைப் பிரசுரித்து எல் லோருக்கும் பயன்பட பரப்புகின்றனர். யாழ் மாகாணத்தைச் சேர்ந்த, கொழும்பு, தலவாக்கல, மட்டக்கலை, அப்புத்தளை, மட்டக்களப்பு, திருமலை, மன்னார் மாவட்டம் ,வன்னிப்பகுதி, யாழ்குடாநாட்டு திருக்குடும்ப மடங்கள் இருக்கும் பங்குத்தளங்களைச் சேர்ந்த பொதுநிலையினரின் அர்ப்பணிப்பான வாழ் வாலும், பணியாலும் தலத்திருச்சபை வளம் பெற்று இறைவன் மகிமைப் படுத்தப்படுவாராக. "இறைவனுக்கே மகிமை".


## நீங்காத நினைவில்

25ம் ஆண்டு நினைவஞ்சலி | 17ம் ஆண்டு நினைவஞ்சலி





கு. ஜோண் பீற்றர் (சில்றன்)

கு. ஜோசேப் (சவுந்தரம்)

15-03-1964 அன்னை மடியில் 14-05-1950

21-10-1987 மண்ணின் மடியில 15-10-1995

கல்லறையில் உமை வைத்து கையிலே மண்ணிட்டு
கண்ணீரால் அதை நனைத்து கதறியே அழவில்லை
வாழ்வில் உமை நேசித்தோம் மரணத்திலும்
உமை மறவோம்.
"ஆண்டவன் சந்நிதியில் ஆனந்தமாய் வாழ்வீர்கள்"

உயரப்புலம் - ஆனைக்கோட்டை

Add: 90/12

பெற்றோர்


## புனித மடுத்தீனார் சிறிய குருமட புதிய மாணவர் அனுமதி 2013.

✠ 2013ம் ஆண்டு புதிய மாணவர்களை (தரம் 9முதல்) சேர்ப்பதற்கான விண்ணப்பப்படிவத்தை புனித மடுத்தீனார் சிறிய குருமட அதிபரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

✠ விண்ணப்பப்படிவத்தை முழுமையாக பூர்த்தி செய்து (கார்த்திகை 15 தொடக்கம் 20ம் திகதிக்கு முன்னதாக) குருமட அதிபரிடம் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும்.

✠ O/L பரீட்சை எழுதி, சித்தியடைந்த மாணவர்கள் குருமடத்தில் சேர்ந்து கொள்ள விரும்பின் அவ்மாணவர்கள் பாடசாலை 2ம் தவணை ஆரம் பிக்கும் போது (சித்திரை மாதம் இறுதிப் பகுதியில்) சேர்த்துக்கொள்ளப் படுவார்கள்.

✠ புதிய மாணவர்களை சேர்ப்பதன் விடயமாக மேலதிக விபரங்கள் தேவைப்படின் குருமட அதிபரை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்புகொள்ளலாம். T.P.No: 021-222-3689 OR 077 - 811 4345

- அதிபர் -


## நீங்காத நினைவலைகள்







19ம் ஆண்டு நினைவஞ்சலி
போணர்பிலிப்
மண்ணில் : 1929-09-27
விண்ணில் : 1993-10-26

6ம் ஆண்டு நினைவஞ்சலி
போணர்பிலிப் அலோசியஸ்
மண்ணில் : 1949-04-26
விண்ணில் : 2006-12-17

9ம் ஆண்டு நினைவஞ்சலி
அ.யுஸ்ரேனியாஸ் லோறன்ஸ்
மண்ணில் : 1999-08-13
விண்ணில் : 2003-09-08

அளவற்ற இரக்கம் நிறைந்த தந்தையே! உம்மில் விசுவாசம் வைத்து வாழ்ந்து இறந்துபோன இவர்களுக்கு நித்திய சாந்தி அளித்தருளும்.

இவர்களின் ஆன்ம சாந்திக்காக 26-10-2012 வெள்ளி கிழமை காலை 6.00மணிக்கு அருள் ஆச்சிரமத்திலும், திருமுழுக்கு யோவான் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்காடுக்கப்படும்.

243, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். T.P. 0212223302 - குடும்பத்தினர் -

Advt-89/12



## விண்ணக வாழ்வில்

25ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 26-0 -1942

இறப்பு 21 -10-1987

திரு. இரட்ணம் குணநாயகம்
(RG. STORES)

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே
என்னிடம் நம்பிக்கை கொள்வோர்
இறப்பிலும் வாழ்வார்" (யோவான் 11.25)

குறுகிய காலத்தில் வாழ்வை நிறைவாக்கிக் கொண்ட உங்களை அன்புடன் நினைவுகூருகிறோம்.

30/2 மருதடிலேன் யாழ்ப்பாணம்.

Add: 92/12

மனைவி பிள்ளைகள் சகோதரர்கள்.

# மௌனம் எப்போது கலையப் போகின்றது?

அலசலும் உரசலும் 10

(சமகால சமூக ஆன்மீக தொடர்)

அருள் முனைவர் ஸ்ரனி அன்ரனி அ.ம.தி.

காலத்தின் முதுகில் சுமத்தப்படும் சுமைகள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. சுமைகள் சுகமானதாக இருந்தால்தான் எதிர்காலம் நம்பிக்கையுள்ளதாக மாறும் சுமைகளாக மாறியுள்ள இன்றைய கலாச்சார சீரழிவுகளும், கடவுள் ஓரங்கட்டப்பட்டுள்ள நிலையும் எமது வரலாற்றின் பக்கங்களில் தொடர்ந்தும் வடுக்களையும் வருத்தங்களையும் ஏற்படுத்தக கூடியதாகவே அமைந்திருக்கின்றது. அண்மைக் காலத்தில் அதிகரித்து வரும் வாள்வெட்டு சம்பவங்கள் மீண்டும் கற்காலத்திற்கு திரும்பப் போகின்றோமா என்ற ஐயங்களை எழுப்புகின்றது. மனிதமும் புனிதமும் அழிந்து, அன்பும் அறமும் அருகிப்போய், பொய்மையும் அநீதிகளும் தாண்டவமாடும் சமூகமாக, ஒரு ஆரோக்கிய மற்ற, அலங்கோல சமூகமாக மாறிவிடுமோ என்ற ஏக்கமும் ஒரு சிலரை வாட்டத்தான் செய்கின்றது. சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருப்பதால் காட்டப்படும் விழிப்புணர்வும் செயற்பாடுகளும், இன்றைய கலாச்சார சீரழிவின் மட்டில் ஏற்படாதது ஏனோ என்று ஏங்கச் செய்கின்றது. இதில் பலர் இன்னும் மௌனிகளாக வாழும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இத்தகைய சீரழிவுகளை கண்டும் காணாதது போல் இருப்பது ஒருவிதத்தில் இவற்றிற்கு நாமும் உடந்தையாகிப் போகின்றோம் என்ற சமூகத்தில் பலர் நான், எனது குடும்பம், எனது வட்டம் என்ற குறுகிய வட்டத்திற்குள் சுயநலப் போக்குடன் வாழ்வது கவலைக்குரியதே! சமூகத்தை பற்றி எதுவித அக்கறையில்லாமல், தனது குடும்பத்தையும், உறவுகளையும் பேணிப் பாதுகாத்து வாழ்வதில் மகிழ்ச்சியும் திருப்தியும் காண முனைவது சமூகத்தை பாதிக்கும் செயற்பாடுகளாகும். அடுத்தவரைப்பற்றியும் சுற்றி நடக்கும் நிகழ்வுகளைப் பற்றியும் கருத்திற்கொள்ளாது வாழ்வது உண்மையான சமூக வளர்ச்சியாக இருக்க முடியாது. எனக்கு ஏன் தேவையில்லாத வேலை, ஏன் வீண் வம்பு என்று கருதாமல் சமூகத்தில் இன்று நடைபெறுகின்ற நற்செய்தி மதிப்பீடுகளுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு எதிராக குரல் கொடுக்கவும், அவற்றை சீராக்க உதவவும் முன்வரும்போது தான் எமது சமூகப்பண்புகளை நிறைவு செய்கின்றோம். நான் வாழும் சமூகம் எக்கேடு கெட்டு போனாலும் பரவாயில்லை என்ற மன நிலையோடு வாழ்பவர்கள் பலர். இதனால் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

### சமூக விழிப்புணர்வு காலத்தின் தேவையாகும்

மனிதன் தனித் தனி தீவுகளாக மாற முடியாது, ஏன் வாழவும் முடியாது தான் சார்ந்து வாழுகின்ற சமூகத்தின் ஓர் அங்கம் என்பதை உணராத வரைக்கும் ஒரு சமூகத்தில் மாற்றம் ஏற்படமுடியாது. இன்றும் மோசமாக எமது சமூகம் மனிதநேயமற்றதாக, ஆரோக்கியமற்றதாக அன்புறவில்லாத சமூகமாக, சுயநலத்தை மட்டும் மூலதனமாகக் கொண்ட சமூகமாக மாறுகின்ற நிலைக்கு தளப்பட்டுள்ளது. இன்று மௌனமாக இவற்றையெல்லாம் வேடிக்கை பார்தது வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். எப்போது எம் மௌனம் கலையப் போகின்றது என்பதே கேள்வியாகும்.

### கிறிஸ்தவ சமூகத்தின் அழைப்பு என்பது என்ன?

இறைவன் மனித குலத்தை ஒரு சமூகமாகவே படைத்தார். இதுவே தொடக்க நூல் கூறுகின்ற செய்தியாகும். அத்துடன் ஓர சமூகமாகவே மீட்டார். எனவேதான் ஞாயிறு திருப்பலியில் குறிப்பாக இறைமக்கள், சமூகமாகவே இறைவனை வழிபடுகின்றோம் என்பது உண்மை. இன்றும் இறைவார்த்தையும் சமூகவாழ்வை, பிறரன்பு வாழ்வை நோக்கியே எம்மை வழிநடத்த முயற்சிக்கின்றது. அருட்சாதனங்களும் சமூகக் கொண்டாட்டங்களாகவே நோக்கப்படுகின்றது. இதிலிருந்து இறைவன் நம்மை தனித்து வாழவும், இறைவனை மட்டும் அன்பு செய்து வாழவும் அழைக்கவில்லை. இறைவனோடு இணைத்து அடுத்தவரையும் அன்பு செய்து வாழவே படைத்தார் என்பதை பெரும்பாலும் நாம் உணர்வதாக இல்லை. இதுவே கிறிஸ்தவத்தின் தலையாய அழைப்பாகும். இன்று கடவுளும் ஓரம் கட்டப்பட்டு, அடுத்தவரையும் மதியாமல் வாழும் தன்னலப்போக்குகளே அதீதமாக சமூகத்தில் காணப்படுகின்றது. தனது சுய இன்பத்தையே மனிதன் நாடும் நிலையும், தன் சுயாதீனத்தை, சுதந்திரத்தைர தவறாகப் பயன்படுத்தும் வாழ்க்கை முறையே நிலவுகின்றது. தனது சுயத்தை காப்பாற்ற, உறுதிப்படுத்த உறவுகளை சிதைக்கின்றளவிற்கு வாழ்க்கை சென்றுகொண்டிருக்கின்றது. அடுத்தவர் நலனை ஓரளவுகூட நினைத்து பார்த்து செயல்படுமளவிற்கு கிறிஸ்தவ சமூகம் இன்னும் வரவில்லை என்று தான் கூறலாம். ஒரு சிலர் பிறரன்புச் செயல்களால், நீதிக்காக குரல்கொடுத்து, அடுத்தவரைப்பறறி சிந்தித்து வாழ்வதனால் தான் இன்றும் முற்றாக மனிதநேயம் மரணித்துவிடவில்லை என்று கூறலாம்.

### மௌனம் கலைய வேண்டும்

இன்று எம் சமூகத்தில் நிலவும் அன்பற்ற, சுயநலமான, உலகப் போக்கு சார்ந்த செயற்பாடுகள் எல்லாம் எவ்வளவு தூரம் கிறிஸ்தவம், கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு வாழ்பவர்களில் செல்வாக்கு செலுத்தும் மதமாக மாறியுள்ளதா என்று சிந்திக்க தூண்டுகின்றது. இறைவார்த்தைக்கு கட்டுப்பட்டு வாழ ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானோர் தயாராக இல்லை என்பதைத் தான் இன்றைய கிறிஸ்தவ வாழ்க்கை முறை வெளிப்படுத்துகின்றது. பங்குச் சமூகங்களில் பிளவுகளும், பாகுபாடுகளும், ஒரு சிலரின் ஆதிக்க செயற்பாடுகளும், கிறிஸ்துவின் போதனைகளை, கிறிஸ்து விரும்பிய ஒரு உன்னதமான சமத்துவமான, சகோதரத்துவமான, நீதியில் வேரூன்றிய இறையரசுச் சமூகத்தை கட்டியெழுப்பவில்லை என்பதை தான் இன்று உணர்த்தி நிற்கின்றது. மதத்தலைமைகளும் அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு விட்டு மட்டும் இருக்காமல் அநீதிகளுக்காக ஒன்றிணைந்து குரல் கொடுத்து செயற்பாடுகளில் இறங்க வேணடும். திருச்சபை தெருச்சபையாக தெருவிற்கு வரவேண்டும் கலாச்சார சுரழிவுகளுக்கு எதிராக மதத்தலைமைகளே முன்னின்று தலைமைத்துவம் கொடுக்க வேண்டும். மௌனத்தை கலைத்து இறையரசு மதிப்பீடுகளை கட்டிக் காக்க, நற்செய்தி மதிப்பீடுகளுக்கு எதிராக நடைபெறும் அனைத்து செயற்பாடுகளுக்கு எதிராக மக்களை வழிநடத்தி பங்கு மட்டத்திலும் பொதுவாகவும் நல்மனம் கொண்டவர்களோடு இணைந்து போராட முன்வர வேண்டும். இதுவே காலத்தின் கட்டாயமாகும். சமூகத்தில் சீரழிவுகளை வளர்க்கும், இறையுணர்வை, இறைப்பற்றை அழிக்கும் தீமைகளுக்கு எதிராக செயற்படுவதும் விசுவாசப் புதுப்பித்தலின் ஒரு கூறாக நோக்கப்பட வேண்டும். மதங்கள் பக்தியை, சடங்குகளை மையப்படுத்திய ஆன்மீகத்தை முன்னுரிமைப்படுத்துவதை விடுத்து இறையன்பிலும் பிறரன்பிலும் மக்கள் வாழக் கூடிய வழிமுறைகளை தேடுவதன் மூலமே நம்பிக்கை வாழ்வை புதுப்பிக்க முடியும். இந்த "நம்பிக்கை ஆண்டில்" இத்தகைய செயற்பாடுகளை முன்னிறுத்தி கிறிஸ்தவத்தை வாழ்க்கை முறையாக மாற்றும் போதே நம்பிக்கை வாழ்வு உறுதியடைகிறது. எனது, நான் என்ற கோட்டிற்குள் நின்று ஆன்மீகத்தை, கடவுளை தேடாமல், சமூகம் என்றும் பரந்த வட்டத்திற்குள் பிறரன்பிலும், அன்புறவிலும், பகிர்விலும் சமூகத்தை நற்செய்தி விழுமியங்களின் அடித்தளத்தில் கட்டியெழுப்புவதே பாரிய சவாலாகும். இந்த சவாலை மக்களும், மதத்தலைமைகளும் எற்றுக் கொள்ள தயாரா? மௌனத்தை கலைத்து செயற்படும் சமூகமாக கிறிஸ்தவ சமூகம் மாற்றத்திற்கு தயாராகுமா? இந்த வினாக்கள் எம் மனச்சாட்சியை உலுப்புகின்றதா? மௌனத்தை கலைப்போம்! செயற்படுவோம்!.

(உரசல் தொடரும்)

---

## ஆறாவது அசிபா.. (2ம் பக்கத் தொடர்ச்சி)

முறையை முன்னெடுப்பதற்கான செயலமர்வுகளில் பயன்படுத்தக்கூடிய வழிகாட்டல் கையேடுகளாகும். பங்கேற்கும் திருச்சபை என்ற கனவை நனவாக்கக் கூடியதாக பங்கேற்பு அணுகுமுறையில் இக்கையேடுகள் தயாரிக்கப்படுகின்றன. சிறிய குழுக்களில் இலகுவாக தாமாகவே தேடிக் கற்றுக்கொள்ள இக்கையேடுகள் துணைபுரியும்.

இக்கையேடுகளின் தயாரிப்பில் ஆயர் ஒஸ்லோர்ட் கிர்மர் அவர்களுடைய பணி முக்கியமானது. தமது ஆபிரிக்க அனுபவத்தில் உருவாகிய 'லும்கோ கையேடுகளை ஆசிய சூழலுக்கேற்ப வடிவமைப்பதில் இவர் முன்னோடியாக செயற்பட்டார்.

இக்கையேட்டுத் தொகுதியில் நான்கு தொடர்கள் உண்டு. ஒவ்வொரு தொடரிலும் பொருத்தமான புதிய புதிய கையேடுகள் தொடர்ச்சியாக தயாரித்து வழங்கப்பட்டு வருகின்றன. அத்தொடர்கள் பின்வருமாறு

A. நற்செய்தி பகிர்வு முறைகள்
B. சிறிய கிறிஸ்தவ குழுமங்கள் (அன்பியங்கள்)
C. பங்கேற்கும் திருச்சபை
D. பங்குக் குழுக்களைப் பயிற்றுவித்தல்

**'அசிபா என்பதன் வழியாக குறிப்பிடப்படும் ஆசியாவுக்கான ஒருங்கிணைந்த மேய்ப்புப்பணி அணுகுமுறை என்பதன் விளக்கத்தை கூறமுடியுமா?**

**ஆசியாவுக்கான (Asian)**

இக்கையேடுகள் ஆசிய ஆயர்களின் நோக்கை நடைமுறைப்படுத்தி ஆசிய கிறிஸ்தவர்கள் தமது ஆசிய வாழ்வை நற்செய்தியின் ஒளியில் புரிந்து கொள்ள துணை செய்கின்றன.

**ஒருங்கிணைந்த (Integral)**

அவை ஆன்மீகத்துக்கும் சமூகத்திற்கும் இடையிலும் தனி நபருக்கும் குழுமத்திற்கும் இடையிலும் திரு ஆட்சி அமைப்புக்கும் பொதுநிலையினரின் கூட்டுப் பொறுப்புக்குமிடையிலும் ஒரு ஒருங்கிணைப்பைப் பேண முனைகின்றன.

**மேய்ப்புப்பணி (Pastoral)**

அவை திருச்சபையிலும் உலகிலும் பொதுநிலையினருக்கான மேய்ப்புப்பணியில் அவர்களைப் பயிற்றுவிக்கின்றன.

**அணுகுமுறை (Approach)**

அசிப்பா கையேடுகளின் அணுகுமுறை "கிறிஸ்துவையும் குழுமத்தையும்" மையமாக்கிக் கொண்ட மேய்ப்புப்பணி அணுகுமுறை அன்று குறிப்பிடலாம். இவை செயலமர்வில் பங்குபற்றுபவர்களை தாமாகவே, தேடிக் கண்டடைய வைத்து 'புதிய விதமாகத் திருச்சபையாக இருத்தலை அனுபவித்துப் பார்க்க உதவுகின்றன.

**இலங்கையில் இது எப்போது ஆரம்பமானது?**

இலங்கையில் 1995ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் கண்டி, லேவல்லை தியான இல்லத்தில் நடைபெற்ற ஒருவாரகால பயிற்சிச் செயலமர்வோடு இது அறிமுகமானது. ஒரு தேசிய ஊக்குவிப்பாளர் குழு உருவாக்கப்பட்டு அக்குழுவின் நெறிப்படுத்தலில் இலங்கையின் அனைத்து மறைமாவட்டங்களிலும் இது பல்வேறு பயிற்சி செயலமர்வுகள் மூலம் நடாத்தப்பட்டு வருகிறது. மறைமாவட்டங்களில் இயங்கும் மறைமாவட்டக் குழுக்கள் பங்கு மட்டசெயலமர்வுகளை முன்னெடுத்து அன்பியங்களை உருவாக்கி வளப்படுத்தி வருகின்றன.

**இவ்வணுகுமுறையின் ஊடாக அன்பியங்கள் உருவாக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள நன்மைகள் எவை?**

- Ø பங்குகளில் கிறிஸ்தவ குழும வாழ்வு அதிகரித்துள்ளது.
- Ø பிளவுமனப்பாங்குகள் குறைந்துள்ளன.
- Ø இறைவார்த்தைப் பாவனை அதிகரித்துள்ளது.
- Ø செபிக்கும் பண்பு வளர்ந்துள்ளது.
- Ø பகிர்தல் வாழ்வு அதிகரித்து காணப்படுகிறது.
- Ø பிறரன்பு செயற்பாடுகள் வளர்ந்துள்ளன.
- Ø பொதுநிலையினரின் பங்கேற்பு அதிகரித்துள்ளது.

போன்றவற்றை நன்மைகளாக குறிப்பிடலாம்.

**அவதானிக்கக்கூடிய பின்னடைவுகள் அல்லது தடைகள் எவை?**

- Ø இதனை வெறுமனே ஒரு செபக்குழுவாகக் கருதும் நிலை.
- Ø பங்கிலுள்ள பல்வேறு செயற்பாடுகள், பக்திச்சபைகளுள் ஒன்றாகக் கருதும் மனநிலை
- Ø ஆண்களின் பங்களிப்பு குறைவு
- Ø குருக்கள் மத்தியில் விழிர்ப்புணர்வும் ஈடுபாடும் இன்மை
- Ø சமயம் சார் செயற்பாடும், பக்தி முயற்சிகளுமே போதும் என்ற மனநிலை
- Ø முறையான தொடர் பயிந்சிகள் இன்மையால் ஏற்படும் தளர்ச்சி

என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

இவற்றை எதிர்கொண்டு அன்பியங்களை வளர்த்துச் செல்வது திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு பேருதவியாக இருக்கும் என்பது தெளிவான உண்மை.

**அருட்பணி. ம. வி. இ. இரவிச்சந்திரன்**
**இயக்குநர் - அன்பியப் பணிக்குழு**

## மறை மாவட்ட இளையோர் ஒன்றுகூடல்

தேசிய இளையோர் ஞாயிறை முன்னிட்டு மறைமாவட்ட இளையோர் பிரதிநிதிகளுக்கான ஒன்று கூடலும் கருத்தரங்கும் 2012.09.22.23 திகதிகளில் உருத்திரபுரம், ஆரோபணம் இளைஞர் விடுதியில் நடாத்தப்பட்டது.

இதில் யாழ் மறைமாவட்டத்தின் 5மறைக் கோட்டங்களிலிருந்தும் 75ற்கும் மேற்பட்ட இளைஞர்கள் யுவதிகள் பங்கு கொண்டு பயனடைந்தனர். 22ம் திகதி சனிக்கிழமை மாலை ஆரம்பித்த இந்நிகழ்வில் வருகைதந்திருந்த இளைஞர்களின் அறிமுகம் அதனைத் தொடர்ந்து யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட மாதாந்த சஞ்சிகையின் வெளியீட்டு நிகழ்வும் இடம் பெற்றது.

''விடியல்'' எனும் இம் மாதாந்த சஞ்சிகையானது இளையோரின் ஆக்கங்களை மட்டுமே தாங்கி நிற்கின்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளி.முல்லை மறைக்கோட்ட முதல்வர் ய.த.யாவிஸ் அடிகளார்கலந்து கொண்டார். இச்சஞ்சிகையின் வெளியீட்டினை யாழ் மறைமாவட்டஇளையோர் ஒன்றிய கலை இலக்கிய குழு சார்பாக வ.நிஷாந் அவர்களும் தொடர்ந்து சஞ்சிகைக்கான நயப்புரையினை கிளி.முல்லை மறைக்கோட்ட இளையோர் ஒன்றிய இயக்குனர் அருட்பணி பா.பிராயன் அடிகளாரும் ஆற்றினர். சஞ்சிகை வெளியீட்டைத் தொடர்ந்து போரினால் பாதிக்கப்பட்ட இளையோருடன் குழு கலந்துரையாடல் நடைபெற்றது பெறப்பட்ட அனுபவங்கள் பொதுவில் பகிர்ந்து கொள்ளப்பட்டன.



2ம் நாள் நிகழ்வுகள் 23.09.2012 ஞாயிற்றுக் கிழமை காலை திருப்பலியுடன் ஆரம்பித்தது. தொடர்ந்தும் பண்பாட்டுப் பாதையில் புத்துலகு நோக்கி.... எனும் தொனிப் பொருளில் யாழ் மறைமாவட்ட இளையோர் ஒன்றியத்தின் செயற்பாடுகள் பற்றிய விளக்கம் இளம் வளவாளர்களால் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்த வளாவளர் திரு.ஆம்ஸ்ரோங் அவர்களால் இன்றைய சமூதாயத்தில் இளையோர் தமது பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு எவ்விதம் செயலாற்ற வேண்டுமென்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இரு நாள் கருத்தரங்குகளின் முடிவில் யாழ் இளையோர் ஒன்றிணைந்த சில செயற்திட்ட தீர்மானங்களை முன் வைத்தனர்.

1.இளையோர் ஒன்றுகூடும் பொது அமர்வுகளின் போது இயலுமான வரை தமிழில் உரையாடுதல்.
2.தமிழ் மொழியில் மேலாடைகள் (T-shirt) இளையோர்களால் அச்சிட்டு விற்பனை செய்தல்.
3வன்னி இறுதிப் போரின் போது பாதிக்கப்பட்ட இளம் பெண்களின் வருமானத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் ''சுயம்'' நிறுவனத்தினுடாக விற்பனை செய்வதற்கு இளைஞர்கள் ஒத்துழைப்பு வழங்குதல் இத் தீர்மானங்களை நிறைவேற்ற இளைஞர்கள் தமது நேரத்தை ஒதுக்கி முழுப்பங்களிப்பை வழங்க முன் வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இறுதியாக மதிய உணவுடன் யாழ் மறைமாவட்ட கத்தோலிக்க இளையோர் ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட ஒன்று கூடல் இனிதே நிறைவுபெற்றது.

### தேசிய நாடகப்...(1ம் பக்கத் தொடர்ச்சி)

சிறந்த நடிகராக இக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன். டேவிட் சாள்ஸ் டாள்ஜஹனும் சிறந்த துணை நடிகராக செல்வன். விமலாஜா வருண்ராஜும் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிற்கான பரிசு கொழும்பு இராம கிருஷ்ணன் மிஷன் மண்டபத்தில் 14-10-2012 ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

இந்த நாடகத்தை கல்லூரியின் நாடக ஆசிரியர் ஜேசுதாசன் இக்னேஷியஸ் பிரபா நெறியாள்கை செய்துள்ளார்.

## மட்டக்களப்பு - தூய வின்சென்ற் டி போல் சபை நூற்றாண்டு விழா

மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் புளியந்தீவு பங்கில் முதன் முதலில் தூய வின்சென்ற் டி போல் சபை ஆரம்பிக்கப்பட்டதன் நூற்றாண்டு நிறைவு விழா கடந்த மாதம் 29ம், 30ம் திகதிகளில் இரு தினங்கள் மிகச் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

முதல் நாள் நிகழ்வு தாண்டவன்வெளி தூய மரியாள் ஆலயத்தில் இருந்து ஆரம்பமான விழிப்புணர்வு ஊர்வலம் தூய சிசிலியா தேசிய பாடசாலை மண்டபத்தை அடைந்ததை தொடர்ந்து சகோ. A.A.G. இராஜேந்திரம் தலைமையில் இடம்பெற்றது. இவ் ஊர்வலத்தில் இலங்கையின் ஏனைய மறைமாவட்ட வின்சென்ற் டி போல் சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மங்கல விளக்கேற்றல், வரவேற்பு நடனம், நூற்றாண்டு விழா சிறப்புரை மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களின் ஆலோசனைகளும். கருத்துக்களும் பரிமாறபபட்டன.

நூற்றாண்டு விழா சிறபபுரையை கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்பணி. நவரட்ணம் நவாஜி அடிகள் வழங்கினார். அவர் தமது உரையில் ''நூற்றாண்டு விழா என்பது கடந்த கால சபை சார்ந்த அனுபவங்களை பறைசாற்றவும் புதிய நூற்றாண்டில் சிறப்பான திட்டங் களை தீட்டுவதே என்றும், துன்புறும் மக்களிடம் கிறிஸ்துவை காண்பதும் அனைவரையும் கடவுளின் பிள்ளைகள் என்ற உணர்வோடு அன்பு செய்வதும், தூய வின்சென்ற் டி போல் அருளாளர் பிரெட்றிக் ஒசானாம் ஆகியோரின் பிறரன்பு பணிக்கான கனவை நனவாக்குவதும் ஒவ்வொரு வின்சென்ஷியன்களின் தார்மீக பொறுப்பு என்றும், பலம் பலவீனம், வாய்ப்பு சவால்கள் போன்றவற்றை சரியான முறையில் ஆய்வு செய்து எதிர்காலத்தில் சிறப்பாக பணி புரிய அழைப்பு விடுத்தார்.''

இரண்டாம் நாள் நிகழ்வு மட்டக்களப்பு தூய மரியாள் பேராலயத்தில் திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் இடம்பெற்ற கூட்டுத்திருப்பலியோடு ஆரம்பமாகியது. தொடர்ந்து பேராலய முன்றலில் நூற்றாண்டு ஞாபகார்த்த நினைவு கல்திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டு தூய சிசிலியா மண்டபத்தில் கலை நிகழ்வுகளும் உரைகளும் ''புனித பணியில்'' எனும் நூற்றாண்டு விழா மலர் வெளியீடும் நினைவு பரிசில் வழங்கலும் மூத்த உறுப்பினர் கௌரவிப்பு நிகழ்வும் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

யாழ் மறைமாவட்ட தூய வின்சென்ற் டி போல் மத்திய சபை ஆன்ம ஆலோசகர் இந்நிகழ்வில் கலந்து கொள்ளாத போதும் அவருடைய வாழ்த்துச் செய்தி நிகழ்வில் வாசிக்கப்பட்டது ஒரு சிறப்பாகும். யாழ் மறைமாவட்டத்தில் இருந்து 15 உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

தகவல் - இ. அ. அமலரட்ணம்.

## கொழும்புத்துறை ஆலயத் திருவிழாவின் போது கொழும்புத் துணை ஆயர்

ஒக்ரோபர் மாதம் 7ஆம் நாள் கொழும்புத்துறை செபமாலை அன்னையின் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்வருடம் வெவ்வேறு குருக்கள் நவதின வழிபாடுகளைச் சிறப்பித்தனர். மக்களின் வாழ்வின் வளர்ச்சியினை நோக்கமாகக்கொண்டு மையக் கருத்துகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஏழாம் நவதின வழிபாட்டிற்கு கொழும்பு துணை ஆயர் எம்மானுவேல் பர்ணாண்டோ வருகை தந்து, நம்பிக்கையின் ஆண்டின் சிறப்பினையும், எவ்விதம் எமது வாழ்வு முழுவதுமே இறை நம்பிக்கையின் வெளிப்பாடாக இருக்கவேண்டும் என்பதனையும் தமது மறையுரையில் தெளிவுபடுத்தினார்.

இந்நாள்களில் ஒரு நாள் இப்பங்கின் எல்லாப் பாடசாலை மாணவருக்கும் ஒரு சிறப்பு நாளாக ஒழுங்குசெய்யப்பட்டது. இருநாள்கள் நவதின வழிபாடுகளை நடத்தவந்த அருட்பணி. அன்ரனி றொக்சன் குரூஸ் (மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்தவர்) மாணவரை வழிநடத்தியதுடன், பிள்ளைகள் ஒப்புரவு அருட்சாதனத்தையும் பெற்று மகிழ்ச்சியாக வீடுசெல்லவும் துணைசெய்தார். இந்நிகழ்வுக்காக அன்று அவர்கள் தமது பாடசாலை அதிபர்களிடமிருந்து லீவு பெற்றிருந்தனர்.

நவதின நாள்களில் நாளாந்தம் காலை 6 மணிக்கு, நற்கருணை நாதரின் பிரசன்னத்திற் கழிக்கவும், செபிக்கவும் பங்கு மக்களுக்கு வாய்ப்புக்கிடைத்தது. இறுதி நவதின வழிபாடு, பங்கின் ஒருபகுதியில் ஆரம்பித்த நற்கருணைப் பவனியோடு ஆரம்பித்து, இரண்டு இடங்களில் தரித்து, தியானம் - செபம் - ஆசீர்வாதத்துடன் ஆலயம் வந்து சேர்ந்து, அருள்தந்தை மரியதாசனின் அர்ப்பண ஆராதனை நடைபெற்றது. அத்துடன் கிறிஸ்தவ – பங்கு வாழ்வில் சந்திக்கும் சவால்கள பற்றிய போதிய விளக்கங்களை அருள்தந்தையர்கள் இரவிச்சந்திரன், றொஷான் அடிகளார்களின் தர்க்கப்பிரசங்கத்தின் வழியாக எல்லோரும் ஆர்வத்துடன் கேட்டுமகிழ்ந்தனர்.

திருவிழா திருப்பலியும், தொடர்ந்து திருச்சுரூபப் பவனியும் பக்தியாக நடைபெற்றன. திருப்பலிப் பாடல்களுடன், அன்றைய வாசகங்களும் அச்சிடப்பட்டு அனைவருக்கும் கொடுத்தது, வழிபாட்டில் ஆர்வமாகப் எல்லோரும் பங்குபெற உதவியாக அமைந்தது.

எமது பங்கில் ஒரு அழகான ஒரு பாரம்பரியமும் உண்டு. திருவிழாஅன்று மதியத்திற்குப்பின் அநேகமான குடும்பங்கள் (எம்மவர்களும், அயற்பங்குகளைச் சேர்ந்தவர்களும்) ஆலயத்திற்கு வந்து, ஒன்றாகச் செபித்து, மெழுகுவர்த்திகொழுத்தி, பின் ஏனையோரையும் சந்தித்து உரையாடி மகிழ்ந்து வீடு செல்வர். திருவிழா திருச்சுரூபப் பவனியுடன் முடிவடையாது, குடும்பச் செபத்துடன நிறைவுபெறுவது மிகவும் அர்ந்தமுள்ளதே.

## மோட்சபாதை வெளிவந்துவிட்டது

யாழ் மறைமாவட்ட வெளியீடாக புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தினால் அச்சிட்டப்பட்டு வெளியாகும் **மோட்ச பாதை** எனும் செபகைநூல் புதிய பதிப்பாக வெளிவந்துள்ளது. பிரதி ஒன்றின் விலை ரூபா. 600 பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவர்கள் புனித வளன் கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### எரியும் திரிகளாக...(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்வி கிருஷ்ண வேணி மயில் வாகனம் கூறுகையில் இசையை நாம் எமதாக்கி இருக்க வேண்டும். இதனை இன்று திருக்குடும்ப சகோதரிகள் நிறைவேற்றியிருபபது பாராட்டத்தக்கது. இணையத்தளம் மிக இன்றியமையாத ஒன்றாக அமைந்துவிட்டது. இறை மக்கள் பலவழிகளில் கேட்டு செபிப்பதற்கு ''நாமே இருக்கின்றவர்'' என்ற இறுவட்டு துணையாக அமையும் என நம்புகின்றேன் என்று கூறினார்.

''நாமே இருக்கின்றவர்'' இறுவட்டு முதல் பிரதியை மனித முன்னேற்ற நடுநிலைய அலுவலர் திருவர்ளர் இரட்ணசிங்கம் அன்ரன் திலகரட்ணம் அவர்கள் பெற்றுக்கொண்டார். ''பாதச்சுவடுகள்'' ஒளி ஒலிப்பேழை முதற் பிரதியை அருட்பணி. நககலஸ ஜேக்கப் அவர்கள் பெற்றுக் கொண்டார். இணையத்தளம் holyfamilysisterjaffna.org அருட்பணி. ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அடிகளார் ஆரம்பித்து வைத்தார்.

இதன் முக்கிய நிகழவுகளான சிறப்புப் பிரதிகள் குருக்கள், துறவியர், பெரியவர்கள், பொதுநிலையினர் என்பவர்களுக்கு வழங்கப் பட்டு சிறப்பிக்கப்பட்டது. பின்னர் கலைஞர்களுக்கான கௌரவிப்பும் நடைபெற்றது.

## எழுச்சி விழாவில் மறை ஆசிரியர் கௌரவிப்பு

பங்குகளில் மறைக்கல்விப் பணியாற்றும் மறை ஆசிரியர்களுக்கு புத்தூக்கம் அளிக்கும் முகமாக ஐப்பசி மாதம் 14ம் நாள் எழுச்சி நாளாக சிறப்பிக்கப்பட்டது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணம், தீவகம், இளவாலை, பருத்தித்துறை ஆகிய மறைக்கோட்டங்களில் இருந்து 415 மறை ஆசிரியர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

அத்தினத்தில் யாழ். மறைமாவட்ட குருமுதல்வர அருள்முனைவர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் திருப்பலி நிறைவேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து ஒருங்கிணைந்த மறைக்கல்வி, இயேசு முதன்மை ஆசிரியர் என்ற கருப்பொருள்களில் நிரந்தர மறையாசிரியர்களான S.F. சவுந்தரம் S. அந்தோனிப் பிள்ளை ஆகியோர்களால் கருத்துரைகள் வழங்கபபட்டன. இயக்குநர் அருட்பணியாளர் அன்ரன் ஜோர்ஜ் அடிகளார் தலைமையில் மாலை நிகழ்வுகள் ஆரம்பமானது. இதற்கு முதன்மைவிருந்தினராக வருகைதந்திருந்த முன்னை நாள் இயக்குநரும், யாழ்.மறைக்கோட்ட குருமுதல்வருமான அருள்பணியாளர் R.H சகாயநாயகம் அவர்களால் கடந்த 25 ஆண்டுகள் பங்குகளில் மறைக்கல்விப் பணியில் தொடர்ச்சியாகப் பணியாற்றிய 28 மறை ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டு நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2012 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.